நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
அம்பிகா ஜுவலர்ஸ்
77. செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி 422839. 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6530 1990 மார்ச் 5 திங்கட்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

# முடியுமானால் அரசாங்கம் மா. சபையை கலைத்து பார்க்கட்டும்

## முதல்வர் வரதர் கூறுகிறார்

### ஈழத்தில் இணைந்து செயல்பட வாரீர் வி.ப. புலிகளுக்கு அழைப்பு

கொழும்பு, மார்ச் 4

வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைக்க முடியாது. முடியுமானால் அரசாங்கம் கலைத்துப் பார்க்கட்டும் என்றார் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள். தமிழ் மக்களின் இலட்சியமான ஈழம் அமைக்கப்பட்டுவிட்டது. இணைந்து செயல்படுவோம் வாரீர் என்று அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழைப்பும் விடுத்தார்.

தனித் தமிழ் ஈழ பிரகடனம் குறித்து திரு வரதராஜப் பெருமாளிடம் "தினபதி" நிருபர் கேட்டார்- அப்போது அவர் மேலும் கூறியதாவது—

இலங்கை அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத்

இந்தியா தோல்வி கண்டு விட்டது—

எம்மைப் பொறுத்தவரையில் தனித் தமிழ் ஈழத்தை பிரகடனப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை—

இலங்கை அரசாங்கத்தினால் மாகாண சபையைக் கலைக்க முடியாது— அப்படி அரசு கலைத்தால் நாட்டில் யாராவது ஒருவர் தடை உத்தரவு கோரி

(2 ஆம பக்கம பார்க்க)



புலியின் வரிகளைக் கொண்ட புதிய சீருடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே பிரபாகரனும் பிரதித் தலைவர் திரு மாத்தயாவும் காணப்படுகிறார்கள்— கடந்த பெப்ரவரி 8ஆம் திகதி முல்லைத்தீவுக் காட்டில் எடுக்கப்பட்டது என்ற குறிப்புடன் சென்னை "ஹிந்து" ஆங்கிலப் பத்திரிகை இந்தப் படத்தைப் பிரசுரித்திருக்கிறது— [உ]

## மண் சரிவில் 6 பேர் பலி

டாக்கா, மார்ச் 4

வங்காளதேசத்தில் வீடு ஒன்று மண் சரிவினால் புதையுண்டதால், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் மரணமானார்கள். இருவர் காயமுற்றார்கள்.

இந்த அனர்த்தம கடந்த சனிக்கிழமை கொக்ஸ் பஸார் மாவட்டத்தில் நிகழ்ந்தது.

இத்தகவலை பொலீஸார் நேற்று தெரிவித்தார்கள். (ண)

## பாதணிகளுடன் யாழ். சென்ற லொறி கடத்தல்

கொழும்பு, மார்ச் 4

பாதணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றை நான்கு அடையாளம காணப்படாத போராளிகள் கடத்திச் சென்றனர். நாலாயிரம சோடி கன்வஸ் சப்பாத்துகள் தமக்குத் தரப்பட்டால் மாத்திரமே லொறி விடுவிக்கப் படும என்று அவர்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

இத்தகவல் அரசாங்கம விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாட்டா பாதணிகளை ஏற்றிச் சென்ற மேற்படி லொறி ஆறு லட்சம ரூபா பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்

(2 ஆம பக்கம பார்க்க)

## கல்முனையில் 1450 பயிற்சி ஆசிரியர்

### வெற்றிடங்களை நிரப்ப பணிப்பு

கொழும்பு, மார்ச் 4

கல்முனை மாவட்டத்தில் 1450 பயிற்சி ஆசிரியர்களை உடனடியாக நியமித்து அங்கு ஏற்பட்டிருக்கும எல்லா வெற்றிடங்களையும நிரப்புமபடி கல்வி அமைச்சர், கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் தலைமையிலான தூதக்குழுவினர் கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்குபண்டாரவை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கல்முனை கல்வி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 1450 வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் அண்மையில் 434 பயிற்சி ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்

(2 ஆம பக்கம பார்க்க)

## புலிகள் கூட்டம்: பொலிஸார் நிலையம் திரும்பினர்

## பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் ஈழ ஜனநாயக குடியரசு பிரகடனம் தேவையற்றது

## தொண்டர் ஆசிரியர்களுக்கு

மேலும் கூறியதாவது—

இலங்கை அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க விருமபுவில்லை— இம் மக்களின் பிரச்சினையை ஐக்கிய இலஙகைக்குள் வைத்துத் தீர்க்க முயன்ற இந்தியாவும் தோல்வி கண்டு விட்டது—

ஐக்கிய இலங்கைக்குள் வைத்து இனப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா தன்னாலான சகல முயற்சிகளையும் செய்தது— எனினும் இந்த விடயத்தில்

னப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை—

வர் தடை உத்தரவு கோரி

(2 ஆம பக்கம பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிற்சி ஆசிரியர் நியமனம்

### இப்போது விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மார்ச் 4

தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிற்சி ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்காக தொண்டர் ஆசிரியர்களிடம் கல்விச் சேவை ஆணைக்குழு விண்ணப்பஙகளை கோரியுள்ளது,

35 வயதுக்கு குறைந்தவர்களே விண்ணப்பிக்க வேண்டும, ஆயினும் தொண்டர் ஆசிரியராக கடமையாற்றிய காலம வயதை கணக்கிடும போது கழிக்கப் படும.

உதாரணமாக 40 வயதுடைய ஒருவர் 5 வருடங்கள் தொண்

(2 ஆம பக்கம பார்க்க)

நிலையம் திருமபினர்

மட்டக்களப்பு, மார்ச் 3

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் நேர காலத்துடன் பொலீஸ் நிலையத்திற்கு திருமபி விட்டனர்—

நேற்று விடுதலைப் புலிகள்

(2 ஆம பக்கம பார்க்க)

## ஈழ ஜனநாயக குடியரசு பிரகடனம் தேவையற்றது

### இ. தொ. கா. கூறுகிறது

கொழுமபு, மார்ச் 4

இன்றைய காலகட்டத்தில் ஈழ ஜனநாயக குடியரசு பிரகடனம தேவையற்றது. பிரச்சினையை மேலும சிக்கலாக்கும என்பதே இலஙகைத் தொழிலாளர் காஙகிரஸின் நிலைப்பாடு.

மேற்கண்டவாறு இ தொ கா பொதுச் செயலாளரும போக்குவரத்து ராஜாஙக அமைச்சருமான திரு எம எஸ் செல்லச்சாமி தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு மாகாண சபையில் அதன் முதலமைச்சர்

(2 ஆம பக்கம பார்க்க)

# யாழ். இன்டர் சிற்றி ரயில் இம்மாதம் ஓடும்

கொழுமபு, மார்ச் 4

யாழ்ப்பாணத்திற்கான இன்டர் சிற்றி ரயில் சேவை இந்த மாதத்திற்குள் ஆரமபிக்கப் படும—

ரயில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி ஒருவர் இதனை தெரிவித்தார்—

யாழ்ப்பாணத்திற்கான இரவு தபால் ரயில் சேவையை ஆரமபிப்பது தொடர்பாக இன்னமும தீர்மானிக்கப்படவில்லை என அவர் மேலும தெரிவித்தார்—

(உ–ற)

## ஈழப் பிரகடனம் இலேசாக தட்டிக்கழிக்கக் கூடிய விஷயமல்ல

### — முஸ்லிம் காங்கிரஸ்

கொழுமபு, மார்ச் 4

ஈ பி ஆர் எல் எப் பின் ஒரு தலைப்பட்சமான சுதந்திர ஈழப் பிரகடனம மிகுந்த சிரத்தையோடு அணுக வேண்டிய ஒன்றல்ல— எனினும அது இலேசாகத் தட்டிக் கழிக்கக் கூடிய விஷயமும அல்ல— அந்தப் பிரகடனம இந்தியாவின் தலையீட்டை மீண்டும வலியுறுத்தும பின்விளைவைக் கொண்டது—

மேற்கண்டவாறு ஸ்ரீலஙகா முஸ்லிம காஙகிரஸ் தலைவரும, திகாமடுல்லை எம பியு மான பிரகடனம முஸ்லிமகளின் அபிஜனாப் எம எச் எம அஷ்ரப் கருத்துத் தெரிவித்திருக்கிறார்—

ஈ பி ஆர் எல் எப்பின் ஈழத்துக்கான ஒரு தலைப்பட்சமான

(2 ஆம பக்கம பார்க்க)

### மட்டக்களப்பில் நெடுமாறன்

மட்டக்களப்பு, மார்ச் 3

காந்தி, காமராஜ் தேசிய காஙகிரஸ் தலைவர் திரு பீ நெடுமாறன் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பை வந்தடைந்தார்.

இந்திய படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் கண்டறிந்தார், பாதிக்கப்

(2 ஆம பக்கம பார்க்க)

## பலம் பொருந்திய ஆயுத சக்தியாகவே அரசுடன் பேசுகிறோம்

### ஏமாறமாட்டோம் என்கிறார்

### புலிகள் ஆலோசகர் பாலசிங்கம்

மட்டக்களப்பு, மார்ச் 3

பேச்சுவார்த்தை மூலம நிரந்தர சமாதானத் தீர்வு கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது—

நாம கடந்த கால தலைமைத்துவம போல் காந்திய தத்துவத்தை நமபி, வெறுஙகையுடன் சென்று இலஙகை அரசிடம ஏமாறும பேர்வழிகள் அல்லர்—

பலம பொருந்திய ஆயுத சக்தியாக இருந்து கொண்டே அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டவர்கள்—

இவ்வாறு நேற்று மட்டக்களப்பு கிழக்கிலஙகை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரஙகில் பலகலைக்கழக மாணவர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிஙகம கூறினார்—

மற்றும பல கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது—

விடுதலை புலிகளுக்கும இலஙகை இராணுவத்துக்கும இடையில் மீண்டும மோதல்கள் ஏற்படலாம என்ற அச்சம நிலவுகிறது—

அரசாஙகம பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கிறது— தென் இலஙகை பிரச்சினை, பொருளாதாரத் தாக்கம, நாட்டின் அமைதி இன்மை, வெளிநாட்டு உதவி தடைப்படும அபா

(2 ஆம பக்கம பார்க்க)

### நாடாளுமன்றம் நாளை கூடுகிறது

கொழுமபு, மார்ச் 4

நாடாளுமன்றம நாளை காலை 9 மணிக்கு கூடும—

தொழிலாளர் நட்ட ஈட்டுத் திருத்தச் சட்ட வரைவு மற்றும மாகாண நீதிமன்றஙகள் விசேட ஏற்பாடுகள் சட்ட வரைவு ஆகியன இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

(ற)

**சோமண்ணை**



அப்ப பின்னை தமிழ் ஈழப் பிரகடனம் நாடாளு மன்றத்திலை எதிரொலிக்குப் போகுது எண்டு சொல்லுங்கோவன்.

## இத்தாலியில் இலங்கையர் உட்பட 54 பேர் உண்ணாவிரதம்

பாறி, மார்ச் 4

இலஙகையர்கள் உட்பட 54 ஆசிய நாட்டு சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் இத்தாலியில் உண்ணாவிரதம ஆரமபித்திருக்கிறார்கள்,

இத்தாலியப் பொலீஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிரு தம இவர்கள் தமக்கு அரசியல் தஞ்சம அளிக்கப்படுமானால் போலி பிரயாண முகவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இலஙகையர்கள், இந்தியர்கள்,

(2 ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

ஏற்றுமதி வர்த்தக அபிவிருத்திக்கு

# கொழும்பில் புதிய சந்தை

## வெளிநாடுகளும் பங்குபற்றும்

கொழும்பு மார்ச் 4

கொழும்பில் (கொழும்பு பெயார்ஸ்" "கொழும்புச் சந்தை" என்ற பெயரில் வர்த்தக சந்தை ஒன்று நடத்தப்படும்—

இதில் வெளிநாடுகளும பங்குபற்றும—

இலங்கையில் ஏற்றுமதி வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் இந்தச் சந்தை நடத்தப்படும—

வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சு இதனை நடத்தத் தீர்மானித்துள்ளது—

இலங்கையில் தேசிய உற்பத்தி பொருள்கள் கைத்தொழிற் பொருட்கள் மரக்கறி வகைகள் பழ வர்க்கங்கள் போன்ற வற்றை ஏற்றுமதி செய்வதற்காக வெளிநாடுகளைக் கூடிய வரையில் சம்பந்தப்படுத்திக் கொள்வதற்காகவே இந்த சந்தை நடத்தப்படும—

இவ்வாறு ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் திரு பெட்ரிக் அமரசிங்க கூறினார்—

(இ—007)

## 50 ஆயிரம் பேருக்கு இதுவரை சைக்கிள் லைசன்ஸ் யாழ். நகரசபை வழங்கியது

கொழும்பு மார்ச் 4

யாழ்ப்பாணம் நகர சபை இந்த ஆண்டில் இதுவரை 50 ஆயிரம சைக்கிள் லைசென்ஸ் களை வழங்கியுள்ளது—

கடந்த காலங்களை விட இந்த ஆண்டிலேயே சைக்கிள் உரிமையாளர்களுக்கு ஆகக் கூடுதலான லைசென்ஸ் வழங்கப் பட்டதாக யாழ்ப்பாண நகர சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

வருடம ஒன்றுக்கு மூவாயிரம சைக்கிள் லைசென்ஸ் வீதமே விநியோகிக்கப் படுகின்றன ஆனால் கடந்த ஆண்டில் 20 ஆயிரம் சைக்கிள் அனுமதிப் பத்திர தகடுகள் விநியோகிக்கப்பட்டன—

இந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 50 ஆயிரமாக அதிகரித்திருக்கிறது—

இதன்படி நோக்கும போது இலங்கையிலேயே ஆகக் கூடுதலான சைக்கிள்களை பாவிக்கும மாவட்டம யாழ்ப்பாணமாகும என்று யாழ் மாநகர சபை தெரிவிக்கின்றது—

(எ—வ)

## கல்முனை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

இதனால் இப்பகுதி பாடசாலைகள் தொடர்ந்தும மூடப் பட்ட நிலையிலேயே இருக்க வேண்டியுள்ளது.

எனவே அங்கு காணப்படும வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும என இத்தூதுக் குழுவினர் அமைச்சரிடம கோரிக்கை விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்தே அமைச்சர் லொக்குபண்டார கல்முனை மாவட்டத்திற்கு உடனடியாக 1450 பயிற்சி ஆசிரியர் களை நியமித்து வெற்றிடங்களை நிரப்புமாறு கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

(உ—ய)

## ஈழ ஜனநாயக...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

திரு அ வரதராஜப் பெருமாள் கடந்த வாரம ஈழ ஜனநாயக குடியரசுப் பிரகடனம அடங்கிய பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்த நிறைவேற்றியது பற்றி பத்திரிகை நிருபர்கள் கேட்ட போதே திரு செல்லச்சாமி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும குறிப்பிட்டதாவது—

நாம எமது உரிமைகளுக்காகப் போராடி உயிர்களையும உடைமைகளையும பறிகொடுத்திருக்கிறோம. மேலும இத்தகைய இழப்புக்கு நாம வழிவகுக்கக் கூடாது.

ஜனாதிபதி பிரேமதாச தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் இறங்கி எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தனது சக்தியை வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நிலைநாட்டி வருகின்றனர்.

வடக்கு – கிழக்கில் ஆட்சியிலிருக்கும ஈ பி ஆர் எல் எப் தலைவர் வரதராஜப் பெருமாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

இந்த காலகட்டத்தில் திடீரென "ஈழ ஜனநாயக குடியரசு" பிரகடனம தேவையற்றது. அது பிரச்சினையை மேலும சிக்கலாக்கும.

இ தொ கா இலங்கையின் ஐக்கியத்தை முன்வைத்தே செயல்பட்டு வருகின்றது.

அகிம்சையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது.

எந்த சிக்கலான பிரச்சினையையும தனது சக்தியை அரணாக வைத்து பேச்சுவார்த்தை மூலம தீர்த்து வைக்க முடியும என நம்புகின்றது.

எனவே, தமிழர் இயக்கங்கள் அனைத்தும தங்கள் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து வெளியார் தலையீடின்றி செயல்படும கால கட்டத்திற்கு வந்து விட்டோம என இ தொ கா கருதுகிறது.

நமது சக்தியை மேலும பலப்படுத்த இது வழிவகுக்கும. பேச்சுவார்த்தைகள் பலனளிக்கும. அதை விடுத்து இவ்வித தனிநாட்டுப் பிரகடனம நமக்கு நன்மை செய்யாது என்றே இ தொ கா கருதுகிறது.

தமிழர் இயக்கங்கள் அனைத்தையும ஒன்றுகூட்டி அதன் மூலம உரிமை பெற முயலுவோம.

இப்படி திரு செல்லச்சாமி குறிப்பிட்டார்.

இ தொ காவின் கடந்தகாலச் செயற்பாடுகளையும அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

## மட்டக்களப்பில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பட்ட மக்களை சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்.

தான் தமிழகம திரும்பியதும இலங்கையின் தமிழ் பிரதேசங்களில் நடைபெற்ற இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை தமிழக மக்களுக்கு விளக்கப்போவதாக நிருபர்களிடம் தெரிவித்தார்.

நேற்று மாலை மட்டக்களப்பில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டத்திலும உரையாற்றினார்.

(மு—த)

## இத்தாலியில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தானியர்கள், வங்காள தேசத்தவர்கள் உட்பட 54 பேர் கடந்த 22ஆம திகதி கிறீஸ் ஊடாக இத்தாலி வந்து சேர்ந்தார்கள் அல்லவா?

அவர்களை இத்தாலிய குடிவரவு அதிகாரிகள் படகுப்பாதை ஒன்றில் ஏற்றி மீண்டும கிறீஸுக்கே திருப்பி அனுப்பி வைத்தார்கள், அவர்களை கிறீஸ் திருப்பி அனுப்பியது, இதனால் அவர்களுடைய நிலை திரிசங்கு சுவர்க்கமாக இருந்தது,

இவர்கள் வேலை அனுமதிப் பத்திரம, வேலைவாய்ப்பு ஆகியவற்றின் உத்தரவாதத்திற்காக போலி முகவர்களிடம் தலா 2,000 டாலரைக் கொடுத்திருப்பதாகப் பொலிஸாரிடம தெரிவித்திருந்தனர்.

இவர்களுக்கான பொறுப்பை ஏற்க கடந்த வியாழக்கிழமை கிரேக்க அதிகாரிகள் சம்மதம் தெரிவித்தார்கள்,

கிரேக்க அதிகாரிகள் தம்மை மீண்டும தமது சொந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்பி விடுவார்கள் என்று இந்த அகதிகள் அச்சம தெரிவித்திருக்கிறார்கள்,

(ண)

## பலம் பொருந்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

யம இத்தகைய பிரச்சினை ஆகியவை இலங்கை எதிர்நோக்கும பிரச்சினைகளில் சிலவாகும—

இந்த நிலையில் எம்முடன் மோத இலங்கை அரசு தயாராக இல்லை—

விடுதலைப் புலிகள் சாதாரண ஆயுதக் குழுவும அல்ல பயங்கரவாதக் குழுவும அல்ல, தேர்ச்சி பெற்ற அனுபவம பெற்ற பலம பொருந்திய தேசிய விடுதலை அமைப்பு ஆகும—

ஆயுத பலம, ஆட்பலம ஆத்மீக பலம ஆகியவற்றில் கடந்த காலங்களைவிட தற்போது நாம 10 மடங்கு முன்னேறி உள்ளோம—

இந்தியப் படைகளுடன் நாம மோத வேண்டுமென்று விரும்ப வில்லை— ஆனால் இந்திய அரசு விடுதலைப் புலிகளை அழிக்க திட்டமிட்டு செயற்பட்டது—

விடுதலைப் புலிகளுக்கும, இந்திய அரசுக்கும இடையிலான மோதல் இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்குப் பின் ஏற்பட்டது அல்ல—

1983 ஆம ஆண்டில் இருந்து விடுதலைப் புலிகளுக்கும, இந்திய அரசுக்கும இடையில் கருத்து மோதல் ஏற்பட்டது—

தமிழ் ஈழப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளே உறுதியாக இருந்ததால் விடுதலைப் புலிகளை அழிக்க இந்திய அரசு 1983 ஆம ஆண்டில் இருந்து செயற்பட்டு வந்தது—

எமது உரிமைகளும, அபிலாசைகளும நிறைவேற்றப்பட வில்லையானால் மீண்டும போராட்டம தொடருமென அரசாங்கத் தலைவர்களிடம நாம கூறி உள்ளோம—

இவ்வாறு கலாநிதி பாலசிங்கம் கூறினார்—

இக் கருத்தரங்கில் மாத்தையா, யோகி இந்தியப் பிரமுகர் திரு நெடுமாறன் ஆகியோரும பேசினர்—

(உ—007)

## ஈழப் பிரகடனம்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

லாஷைகளையும, உரிமைகளையும கருத்திற் கொள்ளாத ஒன்று— இந்தப் பிரகடனத்தை ...

யதை இலங்கை ஞாபகத்தில் கொள்ள வேண்டும—

இலங்கை அரசாங்கத்தின் ...

### இன்றைய திரைகளில்

6 வது வாரம

கெப்பிட்டல்
(கொழும்பு)
2-30, 6-00, 9-30

வியே
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00

கிறனாடா
(பேருவளை)
10-30, 2-30, 6-00

... அமலா

## லஞ்சம் பெற்ற பொலிஸ் வீரருக்கு அபராதமும் தண்டனையும்

கொழும்பு, மார்ச் 4

லஞ்சம பெற்ற குற்றத்தை ஒப்புக் கொண்ட சார்ஜன்ட் பொலிஸ் படை வீரர் ஒருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும, அபராதமும் விதிக்கப்பட்டது,

ஒருவர் வாகனமொன்றில் அனுமதிப்பத்திரம (லைசென்ஸ்) ... எடுக்கச் சென் ...

வழக்கு விசாரணையின் போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனால் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம அமீர் இஸ்மாயில் சந்தேக நபருக்கு 5 வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனையும், 3000 ரூபா அபராதமும் விதித்தார்,

... க்கோடு சேர்த்த 600 ... செலுத் ...

## புலிகள்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டம ஒன்று வெபர் அரங்கில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது—

இக் கூட்டத்தை முன்னிட்டு நாற்றுக்கணக்கான புலிகள் இயக்க போராளிகள் ஆயுதங்களுடன் நகரில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்—

இதனைத் தொடர்ந்தே ...

கிறனாடா
(பேருவளை)
10-30, 2-30, 6-00

பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

12 வது வாரம்
ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
நாளை முதல்
செல்லமஹால்
(கொழும்பு)
2-30, 6-00, 9-30
ஈரோஸ்
(பாமன்கடை)
2-30, 6-00, 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம்)
ராதா - நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

13 வது வாரம்
ஜெஸிமா
(கிராண்ட்பாஸ்)
2-30, 6-00, 9-30
வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
துசித
(பேராதனை)
10-15, 1-15, 3-30
நில்மினி
(வத்தளை)
10-30, 2-30, 6-00
சார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த
வருஷம் 16
(கலர்)

ருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது.

ஒருவர் வாகனமொன்றில் அனுமதிப்பத்திரம (லைசென்ஸ்) இன்றி மாடுகளை ஏற்றிச் சென்றுள்ளார்.

இந்தக் குற்றத்திலிருந்து மேற்படி நபரை காப்பாற்றுவதற்காக இப்படை வீரா 2000 ரூபாவை கேட்டு, 600 ரூபாவை லஞ்சமாக பெற்றுள்ளார்.

இவ்வாறு சந்தேக நபர் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது.

அமீர் இஸ்மாயில் சந்தேக நபருக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத்தண்டனையும், 3000 ரூபா அபராதமும் விதித்தார்.

அத்தோடு சேர்த்து 600 ரூபா தண்டப்பணமாக செலுத்துமபடியும நீதிபதி இவரிடம உத்தரவிட்டார்.

(இ-007)

இருந்தது—

இக் கூட்டத்தை முன்னிட்டு நூற்றுக்கணக்கான புலிகள் இயக்க போராளிகள் ஆயுதங்களுடன் நகரில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்—

இதனைத் தொடர்ந்தே பொலீஸார் பொலீஸ் நிலையங்களுக்கு திருமபியதாக கூறப்படுகிறது—

(உ-மு-8)

மூலம உரிமை பெற முயலுவோம.

இப்படி திரு செல்லச்சாமி குறிப்பிட்டார்.

இ தொ காவின் கடந்தகாலச் செயற்பாடுகளையும அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

(உ)

## புத்தளத்தில் தமிழ்த்தின விழா

புத்தளம், மார்ச் 3

புத்தளம கல்வி வட்டாரத்தில இம்மாத நடுப்பகுதியில் "தமிழ்த் தின விழா" கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை புத்தளம் கோட்டக் கல்விக் காரியாலயம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய தமிழ் தினப் போட்டிகள் எதிர்வரும 13ஆம திகதி கடையாமோட்டைப் பகுதியிலும, 14ஆம் திகதி கற்பிட்டி, காரைதீவு பகுதியிலும, 15ஆம திகதி நுரைச்சோலை, புளிச்சாக்குளம பகுதியிலும நடைபெற உள்ளன.

இறுதிப் போட்டிகள் புத்தளம் பாத்திமா மகளிர் மத்திய கல்லூரியில் 21 ஆம திகதி நடைபெறும்,

பேச்சு, எழுத்து, பாஓதல், நாடகம, நடனம போன்றவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

புத்தளம் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த துணை அதிகாரி ஜனாப் ஏ ஜே எம ஜலீல் மேற்பார்வையில் இதற்கான குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாப் என் எல் எம ரஹ்மதுல்லா, ஜனாப் எம ஏ ஜே ஜவாத் மரைக்கார் ஆகிய இரு ஆசிரியர்களும இணைச்செயலாளர்களாக கடமை புரிகின்றனர்.

(இ-241)

## தொண்டர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

டர் ஆசிரியராக கடமையாற்றி இருந்தால் அவரது வயது 35 ஆகும்வ மதிக்கப்படும,

மூன்று பிரிவுகளாக பிரித்தே அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்,

சாதாரணம, தொழில்முறை விசேடம் என்பனவே அந்த மூன்று பிரிவுகளாகும,

சாதாரண பிரிவின் நியமனங்களுக்காக ஜீ சி ஈ உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும,

தொழில் முறை பிரிவு நியமனத்துக்கு, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமபந்தப்பட்ட பாடநெறியில் டிப்ளோமா பட்டம் பெற்றிருக்க வேண்டும,

விசேட பிரிவைச் சேர்ந்தவர்கள் ஜீ சி ஈ சாதாரண தர பரீட்சையில் மொழி, கணிதம உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும,

சாதாரண பிரிவில் கணித மற்றும விஞ்ஞான ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும,

நுண்கலை, மனையியல், விவசாயம் தொழில் நுட்பத்துறை ஆகிய துறைகளில் தொழில் முறை ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும,

தோட்டப் பாடசாலை சேவை விசேட பிரிவில் உள்ள மூன்று வகை நியமனங்களில் ஒன்றாகும,

ஆங்கில ஆசிரியர் நியமனமும், விளையாட்டு, உடற்கல்வி ஆசிரியர் நியமனமும் மற்றைய இரு வகை நியமனங்களாகும,

1000 ரூபா சமபளத்திற்கு இந்த பயிற்சி ஆசிரியர்கள் 4 வருட காலம சேவை செய்த பின் இவர்களுக்கு பரீட்சையொன்று நடத்தப்படும,

அதில் சித்தி அடைந்தால் நிரந்தர ஆசிரியராக நியமனம வழங்கப்படும,

தொண்டர் ஆசிரியர் நியமனம தொடர்பாக விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதம 22ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளன,

தொண்டர் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இம மாதம (மார்ச்) 15ஆம திகதிக்கு முன்னர் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டும,

(உ-ற)

## பாதணிகளுடன்...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

ளது. பரந்தனில் வைத்தே மேற்படி லொறியை இக்கோஷ்டியினர் கடத்திச் சென்றுள்ளனர்.

லொறி சாரதி பின்னர் விடுவிக்கப்பட்டார். ஆனால் நாலாயிரம சோடி சப்பாத்துகள் தமக்கு தந்தால் மாத்திரமே லொறி விடுவிக்கப்படும என்று இந் நால்வர் கோஷ்டி நிபந்தனை விதித்திருக்கிறது.

பொலன்னறுவையில் பாதுகாப்புப் படையினர் தமிழ் தேசிய இராணுவ வீரரொருவரைக் கைது செய்தனர். இவரிடமிருந்து பத்து ஏ கே 47 ரைபிள்களையும, இத்துப்பாக்கிகளுக்கான 27 மகசின்களையும படையினர் மீட்டெடுத்தனர் என்றும அரசாங்க அறிக்கை கூறுகிறது.

(உ-032)

## முடியுமானால்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம—

உயர் நீதிமன்றத்திற்கு தடை உத்தரவு பிறப்பிக்கும அதிகாரம் இருக்கிறது— அரசாங்கம் முடிந்தால் செய்து பார்க்கட்டும—

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை எம்மோடு சேர்ந்து சுதந்திர தமிழ் ஈழத்தை அமைக்க போராட வரும்படி அழைக்கிறேன்—

தமிழீழம் அமைக்க வேண்டும என்பதே புலிகளின் கொள்கையாகும— நாம் அதனை செய்து விட்டோம— பகைமைகளை மறந்து ஒன்றாக இணைந்திருந்து ஒரே நோக்கத்திற்காகப் போராடுவோம—

எம்மை விரட்டி விட்டு புலிகள் மாகாண சபைக்கு வந்த அதிகாரம போதவில்லை என கூறி தமிழ் ஈழம அமைக்க போராடுவதை விட இப்போதே போராட்டம் நடத்துவதே பொருத்தமானதாகும்—

போராளிகளையும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களை இந்திய படையினர் கப்பல்களில் அழைத்துச் செல்வதாகக் கூறப்படுவது பற்றி முதலமைச்சரிடம் கேட்ட போது அவர் கூறியதாவது—

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை தொழிற்படுகிறது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்குச் சென்றனர்— இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அமைதி நிலவும என்று நம்பி இங்கு வந்தனர்—

எனினும தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் இந்தியா செல்கிறார்கள்— இந்தியா அவர்களை மனிதாபிமான ரீதியில் ஏற்றுக் கொள்ள வேண்டும— அப்படி ஏற்றுக் கொள்வதில் தவறில்லை—

கப்பலில் ஏற்றிச் செல்வதற்கு விண்ணப்பப் படிவங்கள் கொடுக்கப்படுவதாகக் கூறப்படுவது பற்றி எனக்குத் தெரியாது— அப்படிக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

இப்படி அவர் கூறினார்—

[உ—மு]

## ஈழப் பிரகடனம்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

லாஷைகளையும, உரிமைகளையும கருத்திற் கொள்ளாத ஒன்று— இந்தப் பிரகடனத்துக்கும முஸ்லிம காங்கிரஸுக்கும எதுவித சமபந்தமுமில்லை— இந்தப் பிரகடனத்துக்கு முஸ்லிம காங்கிரஸ் எந்த ஆதரவையும அளிக்க மாட்டாது என்றும ஜனாப் அஷ்ரப் கூறினார்—

அவர் மேலும குறிப்பிட்டிருப்பதாவது—

மார்ச் 31 க்கு முன்னர் இந்திய படை இலங்கையை விட்டு முற்றாக வெளியேறினாலும, ஈழப் பிரகடனத்தையொட்டி எழுமபவுள்ள, அல்லது எழுப்பப்படவுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தியாவை அழைக்கும முன்னறிவித்தலையே இப்பிரகடனம குறிக்கிறது—

தன்னாதிக்கமும இறைமையும கொண்ட சுதந்திர ஈழத்தைத் தாம அங்கீகரிக்கவில்லை என்று இந்தியா கூறினாலும, இந்திய நலனுக்கு மாற்றமாக என்று இந்தியா நினைக்கும பட்சத்தில், திரை மறைவில் இந்தியா எதனையும செய்யும என்பதை இலங்கை ஞாபகத்தில் கொள்ள வேண்டும—

இலங்கை அரசாங்கத்தின் அசிர்வாதத்தோடு வடக்கு, கிழக்கின் அதிகாரங்களைக் கையேற்க வரும் விடுதலைப் புலிகள் இன்னமும தமிழீழத்துக்கான கோரிக்கையை கைவிடாத நிலையில் போது, வடக்கு, கிழக்கின் ஆட்சியில் அமர்ந்திருக்கும ஈ பி ஆர் எல் எப் சுதந்திர ஈழத்தைப் பிரகடனப்படுத்துவதைத் தவறென்று கூற முடியாது—

நாட்டுப் பிரிவினை தொடர்பான ஆறாவது அரசமைப்புச் சட்டத் திருத்தச் சட்டத்தை நீக்கி விடுமாறு தமது பழைய விரோதியும பதிய நண்பருமான இலங்கை அரசை விடுதலைப் புலிகள் கோரியிருக்கும போது, அந்த ஆறாவது திருத்தச் சட்டம நிராகரிக்கின்ற ஈழத்தை ஈ பி ஆர் எல் எப் பிரகடனப்படுத்தியிருப்பதைக் குறை கூற முடியாது—

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களின் ஏக பிரதிநிதிகளாக இருக்கும முஸ்லிம காங்கிரஸைக் கலந்து கொள்ளாமல் வடக்கு, கிழக்கு தொடர்பாக எடுக்கப்படும எந்த முடிவுகளும முஸ்லிமகளைக் கட்டுப்படுத்தாது—

இப்படி ஜனாப் அஷ்ரப் தெரிவித்திருக்கிறார்—

(உ)

தினபதி
சிறு விளம்பரம்

தேவை

புதிய அல்லது பாவிக்கப்பட்ட காவல்காரர் உடுப்பு குறைந்த விலைக்குத் தேவை- தொலைபேசி இல- 434982 தபால் பெட்டி இல- 2079 கொழும்பு-
J32089

# ரஞ்ஜன் பல துறைகளில் ஈடுபாடுகொண்ட கலைஞன்



பாரதிராஜா

பல நடிகைகளின் இயற்பெயர் மாற்றி திரைக்கு என பெயர் சூட்டி உயர்த்தி விட்ட பாரதிராஜா லிவிங்ஸ்டனை ரஞ்ஜன் என ஆக்கியுள்ளார்—

தமிழ் திரையுலகில் ஜி, ஐ, ஜெ, ஜா போன்ற அழுத்தமான சொற்களில் ஒன்று பெயருடன் ஒட்டிக் கொண்டிருப்போர் புகழுடன் விளங்கியதும விளங்குவதும ஊரறிந்த விஷயம!

அதுதான் ஜ என்ற எழுத்துச் சேர்ந்திட ரஞ்ஜன் என சூட்டியதாக பூரிப்பு பொங்க பாரதிராஜா தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார்—

இந்த ரஞ்ஜன் பிற மொழி இறக்குமதி அல்ல— தமிழ் மண்ணின் மைந்தர்களில் ஒருவர்— சொந்த ஊர் தரங்கம்பாடி. திரைப்பட பயிற்சிக் கல்லூரியில் 2 ஆண்டு நடிப்புப் பயிற்சி பெற்ற ரஞ்ஜனை முதலில் திரை உலகம அணைத்துக் கொண்டது ஒரு இசைக் கலைஞனாக!

கிட்டார், பியானோ போன்ற பலவகை இசைக் கருவிகளை மீட்டும ரஞ்ஜன் (லிவிங்ஸ்டன்) இளையராஜாவின் குழுவிலும பணி புரிந்தவர்— அதை இன்னும் பெருமையாக நினைப்பவர்!

இவர் ஒரு சினிமா கதை ஆசிரியர்— "[illegible]", "தாக்கிச் சட்டை" ஆகியவைகளுக்கு ஜி எம குமாருடன் இணைந்து கதை திரைக்கதை எழுதியவர்—

"அறுவடை நாள்" படத்தின் கதை ஆசிரியர்— பல படங்களின் துணை டைரக்டர்— எழுதியவர், இசை மீட்டியவர் "பூந்தோட்ட காவல்காரன்" மூலம நடிகரானார்— அதுவும் வில்லனாக-

பார்க்க பாக்யராஜ் அமெரிக்கா சென்ற போது என்னையும உடன் அழைத்துச் சென்றார்— அப்படி என்னை நேசித்தவர் நல்ல ஒருவர் பாக்யராஜ்!

விஜயகாந்த் சாரிடம ஒரு படத்துக்கு கதை சொல்ல சென்றேன்— அவரும தயாரிப்பாளர் இப்ராகிம ராவுத்தரும என்னை நடிகனாக்கி விட்டனர்! வில்லனாக அறிமுகமானேன்— அந்த நன்றியை மறக்க மாட்டேன்!

தொடர்ந்து பல படங்களில் வில்லனாகவே நடித்து விட்டேன்.

பாரதிராஜா எனக்குக் கிடைக்காத வாய்ப்பு ஒன்றை "என் உயிர்த் தோழன்" படத்தின் மூலம கிடைக்கச் செய்து என்னை சந்தோஷத்தில் திணற அடித்து விட்டார்!

இனி "உனக்கும எனக்கும கல்யாணம" என்ற படத்தையும இயக்கப் போகிறேன்— எனது

— பாரதிராஜா



ரஞ்ஜன்

நண்பர் பட்டோ செல்வம இதன் கதை வசனம எழுதுகிறார்— இவ்வாறு ரஞ்ஜன் கூறினார். [இ—10]




துள்ளி வந்த மானை அள்ளி அணைக்காமல் கிள்ளி என்று சொல்லி கிள்ளி விளையாடுகிறாரோ? இவர்தான் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் என்பதை மறந்து விட்டாரோ? (காதல் ஊடலில் இதுவும ஒரு ரகம்)

(முரளி — சித்தாரா) (படம— புது வசந்தம)

## சரிதாவின் கணவர் நடிக்கும் படம் "மனைவி ஒரு மாணிக்கம்"

என் ராதா வழங்க தேனாண்டாள் பிக்சர்ஸ் தயாரிக்கும படம "மனைவி ஒரு மாணிக்கம" படப்பிடிப்பு தொடங்கியது—



# தரம் குறைந்த கொப்பி: விற்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு மார்ச் 4

தரம குறைந்த அப்பியாசக் கொப்பிகள் புத்தகங்கள் போன்றவற்றை விற்பனை செய்யும வர்த்தகர்களுக்கு எதிராக கடும நடவடிக்கை எடுக்கப்படும.


வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் உள்ளூர் விற்பனை ஆணையாளர் திருமதி ஜயனி பின்னவலைக்கு இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்,

நாட்டின் பல பாகங்களிலும் தரம குறைவான கொப்பி, புத்தகங்கள் விற்பனை செய்யப்படுவதாகவும,

ஒரு சிலர் இவற்றை அதிக விலைக்கு விற்பதாகவும அமைச்சுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன,

இதனையடுத்தே அமைச்சர் மன்சூர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்,

நாட்டின் சகல அரசாங்க அதிபர்களுக்கும, உதவி அரசாங்க அதிபர்களுக்கும இது பற்றி ஆராயுமாறும அமைச்சர் உத்தரவிட்டுள்ளார், (இ-வ)



### வருடாந்த மாநாடு

கொழும்பு றோயல் கல்லூரி இஸ்லாமிய சங்க 34 ஆவது வருடாந்த மாநாடு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம பெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம,

கல்லூரி அதிபர் திரு டீ சூரியாராச்சி, சங்கத் தலைவர் ஆகியோரும படத்தில் காணப்படுகின்றார்கள். (இ)

## ரமழானுக்கு பண்டிகை முற்பணம் வழங்க கோரிக்கை

கொழும்பு மார்ச் 4

ரமழான் கொண்டாட்டத்தினை முன்னிட்டு, தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணம வழங்க வேண்டும் சர்வதேச வை எம எம ஏ ஸ்தாபனம இவ்வாறு ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

இதற்கிணங்க அரச துறை ஊழியர்களுக்கு வழங்குவது போன்ற 10 மாதங்களில் அறவிடத்தக்கதான சம்பள முற்பணம ஒன்றினை வழங்குவதற்கு தனியார் துறையைச் சேர்ந்த சகல தொழில் வழங்குநர்களிடமும் வேண்டுகோள் விடுக்குமாறு நான் கேட்கப்பட்டுள்ளேன்—

இவ்வாறு பிரதமரும, நிதி. தொழில் சமூக நலன்புரி அமைச்சருமான டி பி விஜேதுங்க தெரிவித்துள்ளார்—

இவர் இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது;—

எதிர்வரும ரமழான் கொண்டாட்டத்தில் தமது ஊழியர்கள் சமய நடவடிக்கைகளில் பங்கு கொண்டு நோன்பு துறப்பதற்கு வசதியாக அவர்களுக்கு அரை மணி நேர விடுமுறை வழங்க வேண்டும்—

இவ்வாறு தனியார் துறையைச் சேர்ந்த தொழில் வழங்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது— (இ)

## குர்ஆன் விளக்கவுரை

கொழும்பு மார்ச் 4

அகில இலங்கை முஸ்லிம லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன வாலிபர் ஒன்றியத்தினால் நடத்தப்படும குர்ஆன் விளக்கவுரை, எதிர் வரும 7ஆம திகதி புதன் கிழமை மாலை 6—30க்கு கொழும்பு 11 இல் உள்ள மண்டபத்தில் நடைபெறும, (ல)

## அமெ. செல்லும்தாதியருக்கு பாங்கொக்கில் நேர்முகம்

கொழும்பு மார்ச் 4

அமெரிக்காவில் கடமையாற்ற தெரிவாகும இலங்கைத் தாதிமார்களுக்கு பாங்கொக் நகரில் மற்றுமொரு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும—

அமெரிக்க சுகாதார அதிகாரிகள் வெளிநாட்டு தொழில் பணியகம மூலமாக சுகாதார அமைச்சுக்கு இதுபற்றி அறிவித்திருக்கின்றனர்—

அமெரிக்காவில் கடமை புரிவதற்கென சுமார் 3000 தாதிமார் ஏற்கனவே விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பி வைத்திருக்கின்றனர்—

சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் இதனை தெரிவித்தார்—

தெரிவாகும தாதிமாருக்கு இரு வருடகால சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படும—

பாங்கொக் நகரில் நேர்முகப் பரீட்சையை நடத்தினால் தாதி

## ஆலைகளில் இருந்து அகற்றப்படும் மரத்தூள் ஆற்றோடு

காவல்காரன்" மூலம நடிகரானார்- அதுவும வில்லனாக- முதல் படமே பெயர் தேடித் தந்தத!

ரஞ்ஜன் தனது நடிப்புலகம பற்றிக் கூறியதாவது—

பாக்யராஜின் "மௌனகீதம" தொடங்கி "முந்தானை முடிச்சு" வரை துணை டைரக்டராக இருந்தேன்- தலைவர் எம ஜி ஆரை ...

... படம "மனைவி ஒரு மாணிக்கம" படப்பிடிப்பு தொடங்கியது- தொடர்ந்து நடைபெற்று வருகிறது-

இந்தப் படத்தில் முகேஷ் - அர்ஜுன் அண்ணன் - தமபியாக நடிக்கிறார்கள்-

நடிகை சரிதாவின் கணவரான முகேஷ் மலையாள நடிகர்- இவர் நடிக்கும முதல் தமிழ்ப் படம இது- இவருடைய காதலியாக ராதா நடிக்க எஸ் எஸ் சந்திரன், சார்லி, கோவை சரளா மற்றும பலர் நடிக்கிறார்கள்-


முகேஷ்

படம விரித்தாடும நாக பாமபு ஒன்றை மையமாகக் கொண்டு உருவான கதை "மனைவி ஒரு மாணிக்கம-"

டபிள்யூ ஆர் சந்திரன் ஒளிப்பதிவை கவனிக்க, புகழ் மணி வசனம எழுதுகிறார்- இசை சஙகர்—கணேஷ்-

என் ராமசாமி தயாரிக்கும இந்தப் படத்தின் கதை திரைக்கதையை ராமநாராயணன் எழுத சோழராஜன் டைரக்ட் செய்கிறார்-

இவர் திரைக்கு வந்து நூறு நாடகள் ஓடிய "நாகம" என்ற படத்துடன் "அவன்" மற்றும சில படஙகளையும டைரக்ட் செய்தவர்-

இவர் டைரக்ட் செய்யும புதுப்படம "மனைவி ஒரு மாணிக்கம-"

# "சீதா"வில் புதுமை பெண்ணாக கனகா

எஸ் ஏ சந்திரசேகர் இயக்கும புதிய படம "சீதா-" இதில் ரகுமான் - கனகா ஜோடியாக நடிக்கிறார்கள்-

"நீதிக்குத் தண்டனை", "ராஜ நடை" போன்ற பல வெற்றிப் படஙகளை இயக்கிய எஸ் ஏ சந்திரசேகர் இயக்கும புதிய படம "சீதா-"

லலிதாஞ்சலி பைன்ஆர்ட்ஸ் சார்பில் ஷோபா சேகர், ஷீலா சிவா தயாரிக்கும இந்தப் படத்துக்கு வித்யாசாகர் இசை அமைக்க, இண்டு சக்கரவர்த்தி ஒளிப்பதிவு செய்கிறார்-

"சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற கருத்தை மையமாகக் கொண்டு இந்தப் படம தயாரிக்கப்படுகிறது-

இந்தப் படத்தில் சிறையெடுத்தவனை திக்கிரையாக்கும புதுமைப் பெண்ணாக சீதா என்ற கதாபாததிரத்தை உருவாக்கி உலவ விடுகிறார் இயக்குநர் சந்திரசேகர்-

இதில் ரகுமான், சரண்ராஜ், ராதாரவி, சரத்குமார், ஜனகராஜ், கனகா, மனோரமா, ஸ்ரீவித்யா, யுவஸ்ரீ உட்பட பலர் நடிக்கிறார்கள்-

"சீதா" படப்பிடிப்பு தொடஙகி நடக்கிறது- படப்பிடிப்பை முடித்து தமிழ் புத்தாண்டு தினத்தில் படத்தை திரையிட ஏற்பாடு செய்து உள்ளதாக டைரக்டர் சந்திரசேகர் கூறினார்-


கனகா

[இ—10]

தினபதி சினிமா

# மரத்தூள் ஆற்றோடு கலந்தால் அபராதம்

கண்டி மார்ச் 3

அக்குறணை - கட்டுக்ஸ் தோட்டை நெடுஞ்சாலை ஓரமாக ஆற்றஙகரை திரத்தில் இயஙகும மர ஆலைகளில் இருந்து அகற்றபபடும மரத்தூள் ஆற்றோடு கலக்க முற்பட்டால் அபராதம விதிக்கப்படும,

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின கீழ் இந்தப பணிப்பை மத்திய மாகாண பிரதம செயலாளர் திரு எஸ் எம தென்னக்கோன் விடுத்துள்ளார்,

பிஙகா ஓய எனப்படும இந்த சிற்றாற்றில் கரையோரமாக பத்துக்கும மேற்பட்ட மர ஆலைகள் இயஙகுகின்றன,

இவற்றில் இருந்து வெளியேற்றப்படும மரத்தூள் இதற்கு முன்னர் ஆற்று நீரோடு கலந்து அள்ளுண்டு சென்றது,

இவ்வாறு ஆற்றுக்குள் புகுந்த மரத்தூள் மற்றும மண், கழிவுப் பொருட்கள் முதலானவை இப்பொழுது மகாவலி கங்கையில் 40 சதவீதம தேஙகிக் கிடக்கின்றன,

இதன் விளைவாக பொல்கொல்லை அணைக்கட்டுக்கு மேற்புறமாக உள்ள கட்டுகஸ் தோட்டை, நவபொலதன்னை ஆகிய ஆற்றுப் படுக்கைகளில் சேறும சகதியும கலந்து ஆற்றிடை மேடாக மகாவலி கஙகை நிரமபி விட்டது,

இதன் விளைவாக மழைக் காலஙகளில் ஆற்றில் நீர் நிறைந்து கட்டுகஸ்தோட்டை நகர் உட்பட மற்றும் சூழ உள்ள பிரதேசஙகளைப் பாதிக்கும அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது,

இதனை அடுத்தே மர ஆலைத் தூள்களை எரிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது, இதனை மீறுவோருக்கு எதிராக வழக்கும தொடரப்படும.

(ஐ—017)

... முறை வழஙகப்படும-

பானுகொக் நகரில் நேர்முகப் பரீட்சையை நடத்தினால் தாதிமாருக்கு நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல பணம செலவாகும-

ஆதலால் வேறொரு முறையை வகுத்துக் கொள்வது என சுகாதார அமைச்சு உத்தேசித்திருக்கிறது-

(ண—007)


இதோ வெளிவந்துவிட்டது


குணசேன

ஆங்கில—தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00




பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்

எம். டி. குணசேன அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4425
— 1990 மார்ச் 5 —

# தேயிலை, றப்பர் உற்பத்தி கடந்த ஆண்டில் வீழ்ச்சி

## ஆனால் தெங்கு உற்பத்தி அதிகரிப்பு

தேயிலை, றப்பர் உற்பத்தி கடந்த ஆண்டு வீழ்ச்சியடைந்தது என்று மத்திய வங்கி அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஆனால், தெங்கு உற்பத்தி 25 சதவீதம் அதிகரித்தது. 1988 ஆம் ஆண்டை விட 2174 மில்லியன் அதிகப்படியான தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்று மத்திய வங்கி, பொருளாதார அறிக்கை கூறுகிறது.

ஆனால் அதேவேளை இலங்கை தேயிலைக்கு அண்மையில் நடந்த ஏல விற்பனையில் அதிக விலை கிடைத்துள்ளது.

வட இந்தியாவில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. 1988ஆம ஆண்டு 65. 7 மில்லியன் கிலோ கிராம தேயிலையை உற்பத்தி செய்தது. ஆனால் 1989 ஆம ஆண்டு 57. 8 மில்லியன் கிலோ கிராம தேயிலையையே உற்பத்தி செய்துள்ளது.

கென்யாவில் கடும மழையும இடி முழக்கமும இருந்ததனால் தேயிலை உற்பத்தி அங்கு பாதிக்கப்பட்டது.

இலங்கையில் எவ்விதமான சீதோஷ்ண நிலை மாற்றமில்லாதபடியால் போன வருட உற்பத்தியை விட இவ்வருட உற்பத்தி 3 மில்லியன் கிலோ கிராமினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மாதம கொழும்பில் நடந்த ஏலவிற்பனையில் நல்ல ரக தேயிலையை விடத் தரம குறைந்த தேயிலைக்கு நல்ல விலை கிடைத்தது.

ஏனைய நாடுகளை விட இலங்கை தேயிலை அதிக விலையைப் பெற்றுள்ளது.

இலங்கை ஏல விற்பனையிலிருந்து தேயிலையை தனியார் துறை ஏற்றுமதியாளர் வாங்குகின்றார்கள். எகிப்துக்கு அதனை அனுப்புகின்றார்கள்.

கடந்த வருடம் றப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. அதே வேளையில் தெங்கு உற்பத்தி அதிகரித்தது. தேங்காய் எண்ணெயின் உற்பத்தியும அதிகரித்தது. (ம-455)

## தொண்டர் ஆசிரியர்கள்

ஆசிரியர் பற்றாக் குறையால் பெரிதும பாதிக்கப்பட்ட பகுதிகளில் மலையகம குறிப்பிடத்தக்கதாகும.

மலையக கல்வி வளர்ச்சிக்கு தோட்டப் பாடசாலைகள் பெரும இடையூறாக இருந்து வந்தன.

தோட்ட நிர்வாகங்கள் பெயருக்குத்தான் தோட்டப் பாடசாலைகளை வைத்திருந்தன. ஆரமப வகுப்புகளே நடத்தப்பட்டன. தகுதியான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இருந்த ஆசிரியர்களும மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதில் கவனம செலுத்தவில்லை.

தோட்டப் பாடசாலைகள் அரசாங்கத்தினால் கையேற்கப்பட்ட பின்னர் நிலைமை மாறியது.

முறையான பாடசாலைகள் ஓரளவு வசதிகளுடன் ஆரமபிக்கப்பட்டன. எனினும வேண்டியளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

ஆசிரியர் பற்றாக்குறையால் மலையக மாணவர்கள் சரிவரக் கல்வி கற்க முடியாத நிலை இன்றும நீடிக்கிறது.

தொண்டர் ஆசிரியர்களும இல்லையேல் மலையக மாணவர்களின் கதி அதோ கதிதான்.

தொண்டர் ஆசிரியர் [illegible] உரிய சமபளம

## புத்தாண்டின் மூலம் நல்லுறவைப் பேணுவோம்

### — தேவராஜ்

கொழுமபு, மார்ச் 4

"சிங்கள மக்கள் தங்களுக்கே உரிய பாரமபரியங்களோடு புத்தாண்டு விழாவைக் கொண்டாடுகிறார்கள். இதேபோன்று இந்து மக்களும தமக்குரிய கலைப் பண்பாடுகளோடு புதுவருடத்தை வரவேற்கிறார்கள். இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும், நல்லுறவையும ஏற்படுத்த இப்புத்தாண்டைப் பயன்படுத்துக் கொள்வோமாக.

சிங்கள இந்துப் புத்தாண்டை இந்த ஆண்டு சிறந்த முறையில் கொண்டாடுவதற்கு அரசு தனது பூரண ஆதரவையும நல்கும் என்ற ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைவாக தீர்க்கமான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இந்து கலாசார அமைச்சில் ஆலய தர்மகர்த்தாக்களுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடமபெற்றது.

இதனைத் தொடர்ந்து வெகுஜன தொடர்பு அதிகாரிகளுடன் அமைச்சுக் காரியாலயத்தில இடமபெற்ற ஆலோசனைக் கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய அமைச்சர் பி பி தேவராஜ் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"இவ்வருடப் புத்தாண்டுக் கடந்த [illegible]

## சமய நிகழ்ச்சிகள்


### டிக்கோயாவில் மாசிமக திருவிழா

டிக்கோயா, மார்ச் 3

டிக்கோயா மாநகர் அருள்மிகு ஸ்ரீமுத்து மாரியமமன் தேவஸ்தான மாசிமக திருவிழா கடந்த மாதம 25ஆம திகதி ஆரமபமாகியது. இவ்விழா எதிர்வரும 10ஆம திகதி வரை நடைபெறும.

10 ஆம திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஸ்ரீஅமபாள் நகர் பவனி வருவார்.

11 ஆம திகதி ஞாயிறு பிற் [illegible]



## நூல்கள் அன்பளிப்பு

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் பதினொராவது ஆண்டு நிறைவு விழா கண்டி இப்ன் கல்தூன் கல்வி நிலையத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கையின் ஈரான் இஸ்லாமியக் குடியரசு நாட்டின் தூதுவர் ஜனாப் அப்துல் றீஸா பாராஜிராத் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் உகுரஸ்ஸப்பிட்டிய மீரா மகா வித்தியாலய அதிபர் ஜனாப் ஏ எச் எம இஸ்மாயில் தூதுவரிடம இருந்து சில நூல்களைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காண்க.

ஈரான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் பக்ருத்தீன் ஹிஜாஸி, மௌலவி அல்ஹாஜ் எஸ் எல் எம ஹஸன் ஆகியோர் வீற்றிருப்பதையும படத்தில் காணலாம. (ஐ-017)

[படம- ஐ ஏ ரஸாக்]

## தொழில் நுட்ப கல்லூரிக்கு 500 மாணவர்கள்

அக்குறணை மார்ச் 3

1990 ஆம ஆண்டு கல்வி ஆண்டில தமபுள்ளை தொழில் நுட்பக் கல்லூரியில் கூடுதலான மாணவர்களுக்கு அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐநூறு (500) மாணவர்கள் இமமுறை இங்கு அனுமதி பெறுவதற்கான சகல வசதிகளும ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நான்கு லட்ச ரூபா செலவில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடம இமமுறை கூடுதலான மாணவ, மாணவியர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வியை மேற்கொள்ள வசதியாக அமைந்துளளது. (ஐ-411)

## பஸ் சேவை

நாத்தாண்டி மார்ச் 3

வடமேல் மாகாண சபையின் சிலாபம, வென்னப்புவ, புத்தளம இலங்கைப் போக்குவரத்து சபை டிப்போக்களுக்கு ஐமபத்தொரு பஸ்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன.

அதனால், இப்பஸ் டிப்போக்களினால் நடத்தப்படும பஸ் சேவைகள் ஓரளவு சீரடைந்துள்ளன. (ஐ-225)

## செய்தித் திரட்டு

### சுகாதார நிலையங்கள்

மட்டக்களப்பு மார்ச் 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து ஆரமப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

மேற்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் மீராவோடை, அம்பிலாந்துறை, கன்னன்குடா, நாகும சித்தாண்டி ஆகிய இடங்களில் அமைக்கப்படும.

தலா இரண்டு லட்சம ரூபா செலவில் அமைக்கப்படும ஆரமப சுகாதார நிலையங்களுக்கான நிதியை வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது. (ஐ-ரி)

### இராகலையில் மழை

இராகலை மார்ச் 3

வழக்கத்திற்கு மாறாக இராகலை, நுவரெலியா ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகின்றது.

வரட்சிக்குப் பின் மழை பெய்துவருவதையிட்டு தோட்டத் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ள போதிலும, விவசாயிகளுக்குப் பெரும பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரதான போக்குவரத்துப் பாதைகளிலும மண் சரிவுகள் தோன்றி சிரமங்களை தோற்றுவித்துள்ளன. (ஐ-265)

### கருத்தரங்கு

கொழுமபு, மார்ச் 4

களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படவில்லை. பாடசாலை நிர்வாகங்கள் கொடுத்ததை வாங்கிக் கொண்டு தொண்டர் ஆசிரியர்கள் தம்மை ஒறுத்து சேவையாற்றி வருகிறார்கள்.

எத்தனையோ தொண்டர் ஆசிரியர்கள் பல வருடங்களாகச் சேவையாற்றி வருகிறார்கள்.

அவர்களை நிரந்தர ஆசிரியர்களாக்குவது பற்றி அவ்வப்போது பேசப்பட்டது. எனினும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

இப்போது பயிற்சி ஆசிரியர் திட்டத்தின் கீழ் 995 பேர் ஆசிரியர்களாக நியமனம் பெற இருக்கிறார்கள்.

இவர்களில் தொண்டர் ஆசிரியர் ஒருவர்கூட இல்லை. தொண்டர் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்களும் ஆசிரியர் நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருபவர்கள் அவர்களின் சேவை அடிப்படையிலேயே நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள்.

அப்படிப் பட்டவர்களுக்குப் பரீட்சை நடத்தி அவர்களைத் தகுதியற்றவர்கள் என்று கூறி வீட்டுக்கு அனுப்பிவிடக் கூடாது.

அது நன்றி கெட்டதனமாகவே இருக்கும். புதியவர்களை விட வேண்டிய கல்வித் தகைமையுடன் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் சிறந்த ஆசிரியர்களாக இருப்பார்கள்.

---

11 ஆம் திகதி ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

12 ஆம் திகதி இரவு பூங்காவனமும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் அன்னதானமும், வைரவர் பூசையும் நடைபெறும்.

ஆலய தர்மகர்த்தா திரு பி கிருஷ்ணசாமி ரெட்டியார் இத்தகவலைத் தெரிவித்தார். (ஐ-ங)

## மாத்தளையில் மாரியம்மன் கோவிலில்

தெல்தெனியா, மார்ச் 3

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் மாசிமக உற்சவம் இம் மாதம் வெகு விமரிசையாக கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு கொடியேற்ற வைபவம் விசேட பூசைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் வைபவத்தை முன்னிட்டு இம் மாதம் 9ஆம் திகதி மகேஸ்வர பூஜையும், 10ஆம் திகதி மாசிமக இரதோற்சவமும் 11 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 12ஆம் திகதி பூங்காவனப் பூஜையுடன் உற்சவம் முடிவடையும். (ஐ-289)

## புதிய ஆணையாளர்

கொழும்பு மாநகர சபையின் புதிய ஆணையாளராகத் திரு எம் ஏ வீ பெரேரா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மாநகர சபை ஆணையாளராக இதுவரை பணியாற்றிய டாக்டர் டி எச் ஆர் பீரிஸ் இளைப்பாறுகிறார்.

திரு பெரேரா இதுவரை மாநகர சபையின் பிரதான பொறியியலாளராகப் பணியாற்றினார். (இ-007)

---

"இவ்வருடப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள், கடந்த கால கசப்பான சம்பவங்களை மறக்கச் செய்வனவாகவும், பல்வேறு பிரிவினரிடையே நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவனவாயும் அமைய வேண்டும், என்பதே அடிப்படை நோக்கமாகும்.

இதனை நிறைவேற்றும் பொருட்டு, கல்வி, கலாசாரம் சம்பந்தமான உயரதிகாரிகளுடனும் கலந்துரையாடி பல்வேறு ஏற்பாடுகள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவை அனைத்தும் இப்புத்தாண்டை புதிய எண்ணங்களோடு எதிர்கொள்ள வழிசெய்ய வேண்டும்"

இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மதிய உணவு இல்லை என புகார்

இராகலை, மார்ச் 3

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான பாடசாலைகளில் மதிய உணவோ அதற்குரிய பணமோ கொடுக்கப்படவில்லையென பரவலாகப் புகார்கள் கூறப்படுகின்றது.

மதிய உணவுத் திட்டத்தின் கீழ் ஒரு சில பாடசாலைகளில் உணவுப் பண்டங்களும் ஏனையவற்றில் அதற்குரிய பணமும் கொடுக்கப்பட்டு வந்தன. இப்போது இவை இரண்டுமே கொடுக்கப்படுவதில்லையாம். (ஐ-265)

---

தள்ளன. (ஐ-225)

## சாரணர் சேவையை விஸ்தரிக்கத் திட்டம்

மட்டக்களப்பு மார்ச் 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் சாரணர் சேவையை விஸ்தரிப்பதற்கு இவ்வருடத்தில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டப் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு கு சோமசுந்தரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற சாரணர் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே திரு சோமசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்ட சாரண ஆணையாளர் திரு ஏ ரி பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு சோமசுந்தரம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது. –

வயது செல்லலாம், ஆனால் வயோதிபம் வரக் கூடாது. வயோதிபம் வராமல் இருப்பதற்கு மாணவப் பருவத்தில் சாரணிய சேவையில் ஈடுபட வேண்டும்.

கடந்த காலங்களில் சாரண சேவையைத் தொடர்வதற்கு சூழ்நிலை ஸ்தம்பித நிலையில் இருந்தது. ஆனால் தற்பொழுது சூழ்நிலைகள் மாற்றம் அடைந்துள்ளன. சாரணதுறையை விரிவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நற்பண்புகள் வளர்வதற்கு, சாரணியம் வழிவகுக்கிறது. சாரண மாணவர்கள் எந்நேரமும் எந்த இடத்திலும் சேவை புரிவதற்கு தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இவ்வைபவத்தில் பெண் சாரண ஆணையாளர் திருமதி தங்கராசா, பிரிவு சாரண ஆணையாளர் திரு எஸ் என் சிவநேசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (ஐ-ரி)

## கருத்தரங்கு

கொழும்பு, மார்ச் 4

பொலீஸ் பொது மக்கள் நட்புறவுத் திட்டத்தின் கீழ் பாணந்துறை தொட்டவத்தை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் இரண்டாவது கருத்தரங்கு நடத்தப்பட்டது.

பொலீஸ் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு பாவநாசிவம் இக்கல்லூரியின் மாணவர்களின் சீருடையும், ஒழுக்கம் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் தன்மையும் பாராட்டுதற்குரியது என்றார்.

மாணவர் மத்தியில் குற்றத் தடுப்பு முறைகள் பற்றிய விரிவான விளக்கமொன்றையும் அவர் அளித்தார்.

இவ்வைபவத்தில் பொலீஸ் உத்தியோகத்தர் ஜனாப் காதர், கல்லூரி அதிபர் ஜனாப் என் ஜீ நெயினா ஆகியோரும் உரையாற்றினர். (ல-007)

# புத்தளத்தில் சாப்புச் சட்டம் அமுல் படுத்தப்படுவதில்லை

புத்தளம் மார்ச் 3

புதிதாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள சாப்புச் சட்டங்கள் புத்தளம் பகுதியில் அறவே அமுல் படுத்தப்படுவதில்லை என புகார் செய்யப்படுகின்றது.

காலை 10 மணி முதல் இரவு 10 மணிவரையும் கடைகள் திறந்து வைக்கப்படல் வேண்டும் என புதிய சட்டம் கூறுகின்றது.

ஆனால், அப்படியொரு சட்டம் உள்ளதா என புத்தளப் பகுதி வர்த்தகர்களைப் பார்த்து கேட்க வேண்டியுள்ளது.

இங்குள்ள கடைகள் என்றும் போல வழமையாக காலை 9 மணிக்குத் திறக்கப்பட்டு மாலை 6 மணிக்கே மூடப்பட்டு விடுகின்றன.


மக்கள்
நெஞ்சினையில்
தினபதி


இதன் மூலம் அரசு கொண்டு வந்துள்ள சட்டங்கள் அவமதிப்பு செய்யப்படுவதுடன் பொது மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் கொடுக்கின்றன.

மேலும் புத்தளம் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் கிழமைக்கு ஒன்றரை நாட்கள் மூடப்படல் வேண்டும் என்பது விதியாகும்.

அதாவது வெள்ளிக்கிழமை அரை நாளும் சனிக்கிழமை முழு நாளும் வர்த்தக நிலையங்கள் மூடப்படல் வேண்டும்.

இந்த நடைமுறையை பெரும்பாலான வர்த்தகர்கள் கடைப்பிடிப்பதில்லை.

வியாபாரிகள் சனிக்கிழமை முழு நாளும் தமது வர்த்தக நிலையங்களைத் திறந்து வைத்து வியாபாரம் செய்கின்றனர்.

இதனால் இங்கு பணிபுரியும் கடைச் சிப்பந்திகள் சொல்லொணாத் துயரினை அடைகின்றனர்.

தமக்கும் கிழமையில் ஒரு நாளாவது லீவு கிடைக்காதா என ஏங்குகின்றனர்.

புத்தளம் தொழில் அலுவலக அதிகாரிகள் இது விடயத்தில் அக்கறை எடுப்பார்களா? (ஐ-241)

## கருந்தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

கொழும்பு மார்ச் 4

பதப்படுத்தப்பட்ட கருந்தேயிலை உற்பத்தி இவ்வாண்டு 34 லட்சத்து 52 ஆயிரத்து 566 கிலோவால் அதிகரித்துள்ளது.

இத் தகவலை இலங்கை தேயிலைச் சபை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாத உற்பத்தியோடு இவ்வாண்டு ஜனவரி உற்பத்தி ஒப்புநோக்கப்பட்ட போதே நாட்டின் கருந்தேயிலை உற்பத்தி அதிகரித்திருப்பது தெரியவந்தது.

கடந்த ஜனவரி மாதம் ஒரு கோடியே 79 லட்சத்து 75 ஆயிரத்து 79 கிலோ கருந்தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் ஒரு கோடியே 44 லட்சத்து 32 ஆயிரத்து 513 கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. (இ-032)

முன்னாள் பாகிஸ்தானிய ஜனாதிபதி

# ஸியா விபத்து மரணம்: ரஷ்யாவின் சதிவேலை

## திசைமாறிய முன்னாள் ஒற்றர் ஒருவர் பிரஸ்தாபம்

வாஷிங்டன், மார்ச் 4

முன்னாள் பாகிஸ்தானிய ஜனாதிபதி ஸியா உல் ஹக் பதவியில் இருக்கும்போதே 1988இல் விமான விபத்தில் மர்மமான சூழ்நிலையில் மரணமானார் அல்லவா? இந்த விமான விபத்து அநேகமாக ரஷ்யாவின் ஒற்றர் அமைப்பான கே. ஜி. பியின் சதிவேலையாகும். இப்படி முன்னாள் ரஷ்ய ஒற்றர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

விக்டர் ஷேமோவ் (வயது 43) முன்னர் ரஷ்யாவின் ஒற்றர் அமைப்பில் கடமை புரிந்தவர்— பின்னர் அதனை விட்டு விலகியவர்—

அவர் கடந்த வெள்ளிக்கிழமை வாஷிங்டனில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசினார்— 10 வருட காலம் அமெரிக்காவில் வசித்து வந்த அவர் மௌனத்தை கலைத்தார்— அவர் கூறியதாவது—

ரஷ்யா அதின் தென் எல்லைப் பகுதி பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது—

ஆனால் ரஷ்யாவின் கோரிக்கைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஜெனரல் ஸியா உல் ஹக் ஒத்துழைப்பதாக இல்லை—

இவ்வாறான படுகொலைகள் ஒன்றும் புதுமையானவை அல்ல—

இது ரஷ்ய ஒற்றர் அமைப்பின் சதி வேலை என்பதற்குச் சான்றுகள் உண்டு—

ஸியா உல் ஹக் விமான விபத்தில் மரணமாவதற்கு முன்னர் இவரை உயர்மட்ட ரஷ்யக் குழு ஒன்று சந்தித்திருக்கிறது—

இது எனக்கு மேலும் சந்தேகத்தை கிளப்பியிருக்கிறது— அவர்கள் மேலும் ஒரு சந்தர்ப்பத்தைக் கேட்டிருக்கலாம்— எனினும் அதற்கு ஸியா உல் ஹக் மறுத்திருக்கலாம் என்றும் நான் ஊகிக்கிறேன்—

படுகொலைகள் ரஷ்ய ஒற்றர் அமைப்பின் ஒரு பகுதி வேலையாகும்— ரஷ்ய ஒற்றர் அமைப்பு இரண்டாவது அருளப்பர் சின்னப்பரைப் படுகொலை செய்யவும் திட்டமிட்டிருந்தது—

ரஷ்ய ஒற்றர் அமைப்பு படுகொலைகளைத் திட்டமிடும்— அவற்றைச் செய்ய வெளிநாட்டு பிரஜைகளையே பயன்படுத்தும்—

முன்னாள் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அமீனையும் ரஷ்ய ஒற்றர்களே கொன்றார்கள்— அவர் தொடர்பாக ரஷ்யாவுக்கு ஏற்பட்ட அச்சமே காரணமாகும்—

ரஷ்ய ஒற்றர்கள் துருக்கி சைப்பிரஸ் ஆகிய நாடுகளில் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறார்கள்—

இப்படி அவர் தெரிவித்திருக்கிறார்—

1988 ஆகஸ்ட் 19 இல் நடைபெற்ற விமான விபத்தில் ஸியா உல் ஹக்குடன் அமெரிக்கத் தூதுவர் ஆர்னோல்ட் ராபெல் மேஜர் 35 அதிகாரிகளும் கொல்லப்பட்டார்கள் என்பது நினைவிருக்கலாம்—

## பஞ்சாப் வன்முறை

கிறிஸ்தவ தேவாலய எரிப்பு முயற்சி

## 50 தீவிரவாதிகள் எகிப்தில் கைது

கெய்ரோ மார்ச் 4

இஸ்லாமிய தீவிரவாதக் குழு ஒன்று கிறிஸ்தவ தேவாலயங்களையும் இனிப்புப் பண்டத் தொழிற்சாலை — மருந்துச்சாலை ஆகியவற்றையும் தீ வைத்து எரிக்க முயன்றது—

எகிப்திய பொலீஸார் இந்த முயற்சியை முறியடித்து 50 தீவிரவாதிகளைக் கைது செய்தார்கள்—

எகிப்தின் மினியா மாவட்டத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது—


எகிப்திய பத்திரிகையான "அல் கொமஹூரியா" இச்செய்தியை கடந்த சனிக்கிழமை வெளியிட்டது—

தீவிரவாதிகள் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையை நடத்தி விட்டு இந்தத் தீ வைப்பு முயற்சியில் இறங்கினர்—

மாவட்டத்தில் கிறிஸ்தவ — எகிப்திய பிரஜை ஒருவர் விலைமாதர் கோஷ்டி ஒன்றை நடத்தி வருகிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதன் பின்னரே அவர்கள் தீவைப்பு முயற்சியை மேற்கொண்டனர்—

இனிப்புப் பண்டத் தொழிற்சாலை உரிமையாளரின் மகன் 10 வயது முஸ்லிம் சிறுமி ஒருவரை ஒழுங்கீனமாக புகைப்படம் எடுத்தார் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினார்கள்—

(ண)



### முஸ்லிம் நாட்டில் பாப்பரசர்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் மேற்கு ஆபிரிக்க நாடான மாலிக்கு சமீபத்தில் விஜயம் செய்தார். அவருக்கு அங்கு அமோக வரவேற்பு கிடைத்தது. பாப்பரசர் மாலி நாட்டு ஜனாதிபதி மூஸா திராவோருடன் காணப்படுகிறார்.

(ண)

### கைக்குண்டு வெடிப்பு

மணிலா மார்ச் 4

பிலிப்பைன்ஸில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் கடந்த சனிக்கிழமை கைக்குண்டு ஒன்று வெடித்தது—

இச்சம்பவத்தில் 15 வயது இளைஞன் ஒருவன் காயமுற்றான்—

(ண)

### மலேஷியாவில் இருவருக்குத் தூக்கு

பெனாங், மார்ச் 4

மலேஷியாவில் தாய்லாந்து நாட்டவர்கள் இருவருக்குக் கடந்த சனிக்கிழமை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது—

இவர்கள் 5 வாரங்களுக்கு முன்னர் போதைவஸ்துக் கடத்தலில் அகப்பட்டிருந்தார்கள்—

முஹம்மது ஸாகி (வயது 38) அமின்கான் அப்துல்கான் (வயது 29) ஆகிய இவர்கள் இருவரும் வர்த்தகர்கள் ஆவர்—

## பாப்பரசரை கொல்ல: ரஷ்ய ஒற்றர்கள் சதி முயற்சி

### கூற்றுக்கு வத்திக்கான் கருத்து கூற மறுப்பு

வத்திக்கான் நகரம் மார்ச் 4

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மீது 1981 இல் மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சியில் ரஷ்யாவின் ஒற்றர் அமைப்பான கே ஜி பி சம்பந்தப்பட்டு இருந்ததா? இது பற்றிக் கருத்துக் கூற வத்திக்கான் மறுப்புத் தெரிவித்து விட்டது—

இந்தப் படுகொலை முயற்சி தொடர்பாக துருக்கி நாட்டவரான மெஹ்மத் அலி அக்கா குற்றவாளியாகக் காணப்பட்டார்—

அவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பல்கேரிய

# 12 பேர் மரணம்

புதுடில்லி மார்ச் 4

பஞ்சாப்பில் கடந்த வெள்ளிக்கிழமை தலையெடுத்த வன்முறைச் சம்பவங்களில் 12 பேர் கொல்லப்பட்டார்கள்— இவர்களில் 7 பேர் தீவிரவாதிகள் ஆவர்— பஸ் ஒன்றுக்கும் தீ வைக்கப்பட்டது—

இந்திய ஏஜென்சி செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன— டார்ன் டரான் பொலீஸ் மாவட்டத்தில் உள்ள டீநெவல் கிராமத்திலும ஜஹஙிர் கிராமத்திலும பாதுகாப்புப் படையினர் இனமதெரியாத 4 தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றார்கள்—

இவை பற்றிய மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை—

படலா பொலீஸ் மாவட்டத்தில் உள்ள தல்வாண்டி கொறயா கிராமத்தில் போட்டித் தீவிரவாதக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல்களில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்—

[ண]

# பாக். காஷ்மீர் கட்சிகள் இந்தியாவுக்கு எச்சரிக்கை

இஸ்லாமாபாத் மார்ச் 4

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும ஆஸாத் காஷ்மீரில் உள்ள அரசியல் கட்சிகள் ஜம்மு – காஷ்மீர் விவகாரம தொடர்பாக இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றன—

அவை இந்தியாவில் உள்ள காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு சம்பிரதாயபூர்வமாக ஆதரவு தெரிவித்திருக்கின்றன—

காஷ்மீர் மக்களின் பிரிவினைப் போக்கு உணர்வுகளை அமுக்க முயன்றால் அது பிராந்திய முரண்பாடாக வளர்ந்து விடும் என்று அவை இந்திய அரசை எச்சரித்திருக்கின்றன—

ஆஸாத் காஷ்மீரில் உள்ள 11 அரசியல் கட்சிகள் இஸ்லாமாபாத்தில் மாநாடு ஒன்றை நடத்தின—

பாகிஸ்தானின் எல்லையை ஒட்டிய முஸ்லிமகளைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும பகுதிகளில் நெருக்கடிகளை கையாளும முறையில் இருந்து எழும பிராந்திய விளைவுகளுக்கு இந்தியாவே தனித்துப் பொறுப்பேற்க வேண்டி வரும என்றும் அவை தெரிவித்திருக்கின்றன—

மாநாட்டுக்கு ஆஸாத் காஷ்மீர் பிரதமர் சிகந்தர் ஹயத் தலைமை வகித்தார்— ஆஸாத் காஷ்மீர் சட்ட சபையின் மார்ச் 13ஆம திகதிய விசேட கூட்டத் தொடரில் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ உரையாற்றுவார் என அவர் தெரிவித்தார்—

[ண]

# இரு ஏமன்களும் இணையும்

சனா மார்ச் 4

வடக்கு ஏமனும தெற்கு ஏமனும மீண்டும ஒன்றிணையவிருக்கின்றன— இதன் முதற்கட்டமாக அவற்றின் 10 அரசாங்கத் தொழில் முயற்சிகள் அலுவலகங்கள் ஆகியன ஒருமுகப்படுத்தப்படவிருக்கின்றன—

வட ஏமனும தென் ஏமனும் கடந்த சனிக்கிழமை இதற்கு இணக்கம தெரிவித்தன— (ண)

...கொல்லப்பட்டார்கள் என்பது நினைவிருக்கலாம—

[ண]

...29) ஆகிய இவர்கள் இருவரும வர்த்தகர்கள் ஆவர்—

[ண]

...1981 இல் மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சி...

...வத்திக்கான் மறுப்புத் தெரிவித்து விட்டது—

இது பற்றிக் கருத்துக் கூற எதுவும கிடையாது என்று வத்திக்கான் பேச்சாளர் றோகுயின் நவறோ – வால்ஸ் நிருபர்களிடம தெரிவித்தார்—

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மீது 1981 மே மாதம் சென் பீட்டர்ஸ் சதுக்கத்தில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம செய்யப்பட்டது—

...டார்—

அவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பல்கேரிய இரகசிய சேவை அமைப்புக்கும் தொடர்பு உண்டு என்று தெரிவித்தார்—

இந்தச் சம்பவத்தில் கே ஜி பி ஆர்வம் காட்டியது என்று அமெரிக்க ஒற்றர் அமைப்பான சி ஐ ஏயின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்று முன்னாள் ரஷ்ய ஒற்றரான விக்டர் இவானோவிச் ஷேமோவ் வாஷிங்டனில் பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருக்கிறார்—

சோஸலிச நாட்டு மதகுரு ஒருவர் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது பற்றி அப்போதைய கே ஜி பி ரஷ்ய ஒற்றர் அமைப்பின் தலைவர் யூரி அந்திரோபோவ் சினமுற்றிருந்தார் என்றும அவர் கூறியிருக்கிறார்—

[ண]

# உலகச் செய்திகள்

# திடீர் தாக்குதலுக்கு வசதியாக வடகொரியா நிலச்சுரங்க வழி

## தென்கொரியா குற்றச்சாட்டு

சியோல் மார்ச் 4

கம்யூனிஸ வடகொரியா இராணுவ சூனியப் பிரதேசமான எல்லைப் பகுதிகளில் திடீர்த் தாக்குதலுக்கு வசதியாக நிலத்திற்கு அடியிலான நிலச் சுரங்க வழிகளை அமைத்து வருகிறது—

இப்படி தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் லீசாஙஹூன் குற்றமசாட்டினார்—

கடந்த சனிக்கிழமை அவர் சியோலில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்— அவர் கூறியதாவது—

தென் கொரியாவையும வட கொரியாவையும் 2½ மைல் தூர எல்லை பிரிக்கிறது— இதில் வட கொரியா 20க்கும மேற்பட்ட நிலச் சுரங்க வழிகளை அமைத்திருக்கிறது என்று நம்புகிறோம்—

இவை இராணுவ சூனியப் பிரதேசங்களிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன— வடகொரிய துருப்புகள் ஊடுருவலை நடத்தி திடீர்த் தாக்குதலை மேற்கொள்வதற்கு இவை இரகசிய பாதையாக அமையும,

இவ்வாறான படையெடுப்பு சுரங்கப் பாதைகள் சமாதான எல்லைக்கோடாக அமைக்கப்பட்டிருப்பது உடன்படிக்கையை மீறும செயலாகும— இது பொறுத்துக் கொள்ள முடியாத ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும—

இப்படி அவர் தெரிவித்தார்—

தென் கொரியா இராணுவ சூனியப் பிரதேசத்தில் 1974 இல் இரகசிய சுரங்க வழி ஒன்றைக் கண்டுபிடித்தது— 1975 இலும 1978 இலும மேலும் 2 சுரங்க வழிப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டன—

[ண]

# காம்பூஷியாவுக்கு சீன ஆயுதங்கள்

பாங்கொக் மார்ச் 4

காம்பூஷிய மக்கள் தேசிய விடுதலை முன்னணிக்கு சீனா மீண்டும ஆயுதங்களை விநியோகிக்க ஆரம்பித்திருக்கிறது—

இத்தகவலை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

[ண]

# விலைமாதருக்கு தாய்லாந்து சான்றிதழ்

பாங்கொக் மார்ச் 4

தாய்லாந்து நாட்டில் உள்ள 80000 விலை மாதர்களுக்கும சான்றிதழ்கள் வழங்க இருக்கிறது—

அதாவது இவர்கள் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கவில்லை என்று சான்று பகரும் "கிறீன் கார்ட்" வழங்கப்படவிருக்கின்றன—

தாய்லாந்தின் பொது சுகாதார அமைச்சே இவற்றை வழங்கவிருக்கிறது—

இந்தக் கார்டுகளை வைத்திருக்கும விலைமாதர்கள் காலத்திற்குக் காலம எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள் தொடர்பாகப் பரிசோதனை செய்யப்படுவார்கள்—

இவர்கள் எவ்வித தொந்தரவும இன்றி தொழிலை நடத்த அனுமதிக்கப்படுவார்கள்—

[ண]

# ஈரானுடன் ஆயுதப் பேரம்? செய்திக்கு சீனா மறுப்பு

பாக்தாத் மார்ச் 4

ஈரானுடன் சீனா ஆயுத விற்பனைக்கு பேரம் பேசியதா? இவ்வாறு வெளிவந்த அறிக்கைகளை சீனா மறுத்திருக்கிறது—

சீன வெளியுறவு அமைச்சர் கியான் கிசென் ஈராக்கில் மூன்று நாள் விஜயம ஒன்றை மேற்கொண்டார்— பயண முடிவில் அவர் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசினார்— கடந்த சனிக்கிழமை நடந்த அந்த மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனை மறுத்தார்—

[ண]

உதிரிப்பாகங்கள் இன்றி

# கட்டை ஏறிய பஸ்கள்

# ஏப்ரலுக்கு முன் சேவை

கொழும்பு, மார்ச் 4

போக்குவரத்துச் சபைகளில் உதிரிப் பாகங்கள் இல்லாமல் ஒதுக்கப்பட்டுள்ள 1,500 பஸ்கள் ஏப்ரல் மாதத்திற்குள் சேவையில் ஈடுபடுத்தப்படும்—

பிரஸ்தாப பஸ்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் இந்தியாவில் இருந்து விமான மூலம் தருவிக்கப்படும்—

இத் தகவலை போக்குவரத்து அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

போக்குவரத்துச் சபைகளில் 2000க்கும் அதிகமான பஸ்கள் உதிரிப்பாகங்கள் இல்லாமல் ஓட முடியாமல் இருக்கின்றன. உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்ய திறைசேரியிடம் இருந்து 10 கோடி ரூபாவை போக்குவரத்து அமைச்சு கேட்டிருந்தது.

திறைசேரி 10 கோடி ரூபாவை போக்குவரத்து அமைச்சுக்கு வழங்க சம்மதம் தெரிவித்திருப்பதாக அமைச்சின் அதிகாரி மேலும் தெரிவித்தார்—

## கம்பளையில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்

### நகரசபைத் தலைவர் உறுதி

கம்பளை, மார்ச் 3

கம்பளை நகரின் குடிதண்ணீர்ப் பிரச்சினை விரைவில் தீர்வு காணப்படும்—

இவ்வாறு கம்பளை நகர சபைத் தலைவர் திரு பி பீ குணதிலக்க நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்து பேசும்போது கூறினார்—

அவர் தொடர்ந்து பேசும்போது;— கம்பளை நகரில் சீரான குடிதண்ணீர் விநியோகத்தை ஏற்படுத்த நகர சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

எமது புதிய குடிதண்ணீர் திட்டத்தை காலதாமதம் செய்யாமல் கூடிய விரைவில் ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை நாம் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவோம்—

சுமார் 30 ஆயிரம் மக்கள் நிலைத்து வாழும் கம்பளை நகரில் சுமார் 10 ஆயிரம் வந்து போகும் மக்களும் சேர்ந்து 40 ஆயிரம் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டிய நிலையில் நகர சபை இருக்கிறது—

ஆனால் இன்று 3½ லட்சம் கலன் குடிதண்ணீர் மாத்திரமே எமக்கு கிடைக்கிறது— இதைக் கொண்டு சுமார் 40 ஆயிரம் பேருக்கு பங்கிட்டு விநியோகிக்க வேண்டிய மிகவும் கடினமான பொறுப்பு எமமைச் சார்ந்துள்ளது—

ஆகவேதான் முதலில் இந்த குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு கூடிய விரைவில் தீர்வு காண நான் முழு முயற்சி எடுத்து வருகிறேன்—

இவ்வாறு அவர் கூறினார்

(எ—083)

## சாராய வடிசாலை மீண்டும் இயக்கம்

கோப்பாய், மார்ச் 3

திக்கம சாராய வடிசாலை மீண்டும் செயற்படவுள்ளது. இந்த வடிசாலையின் செயற்பாடுகளை முறைப்படுத்துவதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது—

வடிசாலையின் செயற்பாட்டிற்கு புதிய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது— இதற்கு தேவையான உபகரணங்களை பனம்பொருள் அபிவிருத்திச் சபை வழங்கியுள்ளது—

(எ—142)



படத்தில் — கமபஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் (இரண்டாவது) திரு மஹேன் குணசேகர, மேல் மாகாண உணவு கூட்டுறவுக் கைத்தொழில் மீன்பிடித்துறை சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம யூஸுப், மேல் மாகாண இளைஞர் மகளிர் விவகார தொழில் வாய்ப்பு விளையாட்டுத்துறை அமைச்சர் திரு சுரனிமல ராஜபக்ஷ ஆகியோரைக் காணலாம.

வித்தியாலய அதிபர் ஜனாப் வை எல் எம பரீட், கிராமசேவகர் ஜனாப் அமீர் மொஹிடீன், ஜனாப் வஹ்ஹாப் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(ஐ—040)

## செஞ்சிலுவைசங்க நிவாரண நடவடிக்கை நாடெங்கும் விஸ்தரிப்பு

கொழும்பு, மார்ச் 4

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தனது நிவாரண நடவடிக்கைகளை நாடெங்கும் விஸ்தரிக்கவிருக்கிறது— இதன் பொருட்டு பெரும் தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்களின் தயவை செஞ்சிலுவைச் சங்கம் நாடியிருக்கிறது—

எதிர்வரும் மூன்று வருட காலப் பகுதியில் நாடெங்கும் தமது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் திட்டத்தை செயல்படுத்தவிருக்கும் இச் சங்கம் இதன் பொருட்டு நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது—

இதன் ஒரு அங்கமாகவே தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்களிடம் உதவி கேட்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விரைவிலேயே டாக்டர்கள், சட்டத்தரணிகள், முக்கிய பிரமுகர்கள் உட்பட பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இதே மாதிரியான வேண்டுகோள் விடுக்கப்படும்—

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஒரு பதிவு செய்யப்பட்ட பொது நல ஸ்தாபனமானதால் இச் சங்கத்துக்கு அளிக்கப்படும் நன்கொடைகள் வரி விலக்குப் பெறும்—

இதேசமயம் சில தொழிலதிபர்கள் இச் சங்கத்தில் இணைந்து

## அரசைக் கவிழ்க்கும் முயற்சி தொ. சங்கம் பங்கேற்காது

### பொது சேவை சங்கத் தலைவர் கடிதம்

கொழும்பு, மார்ச்— 2

அரசுடன் தொடர்பில்லாத 29 தொழிற்சங்கங்களில், எந்தவொரு தொழிற்சங்கமோ சமமேளனமோ "அரசை கவிழ்க்கும்" சதி முயற்சிகளில்

றத்தில் அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான விவாதம் நடைபெற்றது—

விவாதத்தை முடித்துவைத்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன

"சடன் பெரமுன" போன்ற இயக்கங்கள் உருவாவதற்கும் வழிவகுத்தன—

எனவே எதிர்காலத்தில் அத்தகைய நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கும் ஜனநாயகத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும்

மாணவர்களின்

## பற்களைப் பேண சுகாதார நடவடிக்கை

வறக்காப்பொளை மார்ச் 3

ரம்புக்கனைத் தொகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களின் பற்களைப் பேணும் சுகாதார நடவடிக்கை ஒன்றினைப் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் செய்து வருகிறது—

இதன் பொருட்டு தற்போது ரம்புக்கனை பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், தாதிகள் சகிதம் சென்று ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களின் பற்களைப் பரிசோதித்து வருகின்றனர்—

உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டியவர்களுக்கு ஸ்தல சிகிச்சையளிக்கப்படுவதுடன் ஏனைய பல் நோய்களுக்கு இலக்கான மாணவர்கள் பாடசாலைப் பற் சிகிச்சை நிலையங்களுக்கும் அருகாமையில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்படுகின்றனர்—

இதே நேரம் பாடசாலைகள் தோறும் நேரில் சென்று மாணவர்களுக்கு பொது சுகாதார பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கை ஒன்றையும் பிராந்திய சுகாதாரப் பணியகம் மேற்கொண்டு வருகிறது—

[ஐ—333]

பாடசாலை

## அதிபர்கள் கிராமத்தின் தலைவராக செயல்பட வேண்டும்

மினுவாங்கொடை, மார்ச் 3

ஒவ்வொரு பாடசாலையின் அதிபர்களும் அந்தந்தக் கிராமங்களின் தலைவர்களாக இருந்து செயல்பட வேண்டும்—

இவ்வாறு மேல் மாகாண கல்வி, இளைஞர் மகளிர் விவகார தொழில் வாய்ப்புத்துறை விளையாட்டுத்துறை அமைச்சர் திரு சுரனிமல ராஜபக்ஷ கூறினார்—

மினுவாங்கொடை, கல்லொளுவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புதிய இரு மாடிக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது

இது தொடர்பாக இடம்பெற்ற வைபவத்தில் அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது—

அனைத்து பாடசாலை அதிபர்களும் பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்ட வேண்டும்— பெற்றோர்களும் அதிபர்களுக்கு உதவியாக எப்பொழுதும் செயல்பட வேண்டும்—

கல்வித் துறையில் புரட்சிகரமான ஒரு மாற்றத்தை இன்றைய அரசு ஏற்படுத்தியுள்ளது— கிராமப்புற மக்களும் இன்று கல்வியில் விழிப்புணர்ச்சி பெற்றுள்ளார்கள்—

முஸ்லிம் சமூகம் வியாபாரத் துறையில் ஆர்வம் காட்டுவது போல் கல்வித் துறையிலும் அதிக கரிசனை காட்ட வேண்டும்—

இப்படி திரு ராஜபக்ஷ கூறினார்—

மேல் மாகாண உணவு கூட்டுறவு கைத்தொழில் மீன்பிடித் துறை சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம யூசுப் பேசுகையில்—

கலன் குடிதண்ணீர் மாத்திரமே எமக்கு கிடைக்கிறது- இதைக் கொண்டு சுமார் 40 ஆயிரம பேருக்கு பங்கிட்டு விநியோகிக்க வேண்டிய மிகவும் கடினமான

தமது நடவடிக்கைகளை ... ரிக்கும திட்டத்தை செயல்படுத்த விருக்கும இச் சங்கம இதன் பொருட்டு நிதி திரட்டும பணி யில் ஈடுபட்டுள்ளது-

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

# பாடசாலைகள் வழங்கும் பணிகள் 20ஆம் திகதி பூர்த்தி

கொழும்பு மார்ச் 4

ஐந்தாமதர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உயர் மட்ட பாடசாலைகளை வழங்கும் பணிகள் மார்ச் மாதம 20 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்படும்-

கல்வி அமைச்சு இதற்கான நடவடிக்கைகைகளை மேற்கொண்டு வருகின்றது-

இம்முறை பெரும எண்ணிக்கையான மாணவர்கள் இந்த பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்-

இவர்கள் தாம் கல்வி கற்க விரும்பும பாடசாலையை குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய படிவங்களை இதுவரை ஒழுங்காக அனுப்பவில்லை-

இத்தகைய படிவங்களை ஏற்றுக் கொள்ளும திகதி முடிவடைந்த போதிலும தொடர்ந்தும் அமைச்சுக்கு படிவங்கள் கிடைத்தவண்ணமே உள்ளன

மாணவர் விரும்பும பாடசாலைகளை வழங்க கல்வி அமைச்சு தயாராகவே உள்ளது என்று கல்வி அமைச்சின் பாடசாலை விவகாரப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

(ஐ-வ)

# கிளிநொச்சியில் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகம்

கோப்பாய், மார்ச்- 3

கிளிநொச்சி மாவட்டத்திற்கு த் த னி ய ா ன பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகம இமமாதம் 14ஆம திகதி திறந்து வைக்கப் படவுள்ளது-

யாழ் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் கீழ் இருந்தவந்த கிளிநொச்சி மாவட்டம இம மாதம் தொடக்கம தனியாகப் பதிவு அலுவலகமாகச் செயற்படவுள்ளது-

கிளிநொச்சி புதிய அலுவலகத்திற்கு வசதியான கட்டிடம அமைக்கப்பட்டுள்ளது இந்தக் கட்டிடம் மார்ச் 13 ஆம திகதி திறந்து வைக்கப்படவுள்ளது

யாழ் பதிவு அலுவலகத்தின் உதவி பதிவாளராக கடமையாற்றிய திரு ந சதாசிவ ஐயர் கிளிநொச்சி மாவட்ட பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

(ஐ-142)

பொது நல ஸ்தாபனமானதால் இச் சங்கத்துக்கு அளிக்கப்படும நன்கொடைகள் வரி விலக்குப் பெறும-

இதேசமயம சில தொழிலதிபர்கள் இச் சங்கத்தில் இணைந்து கொள்ள விருப்பம தெரிவித்திருப்பதாகவும தமது உத்தியோகத்தர்களை முதலுதவி சிகிச்சையில் பயிற்றுவிக்க வேறு சிலர் இணக்கம தெரிவித்திருப்பதாகவும இச்சங்கம கூறியுள்ளது-

எதிர்வரும 27 ஆம திகதி செஞ்சிலுவை கொடி தினமாகும.

[ஐ—032]

கொழும்பு, மார்ச்- 2

அரசுடன் தொடர்பில்லாத 29 தொழிற்சங்கங்களில், எந்தவொரு தொழிற்சங்கமோ சமமேளனமோ "அரசை கவிழ்க்கும" சதி முயற்சிகளில் பங்கேற்காது-

இலங்கை பொது சேவையாளர் சங்கத்தின் தலைவர் திரு ஜயரத்ன மலியகொட, இவ்வாறு எழுதப்பட்ட கடிதமொன்றை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவிற்கு அனுப்பியுள்ளார்-

அண்மையில் நாடாளுமன்றத்தில் அவசரகால சட்டத்தை மேலும ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான விவாதம நடைபெற்றது-

விவாதத்தை முடித்துவைத்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன பேசும்போது: சில தொழிற்சங்கங்கள் அரசைக் கவிழ்க்க முயற்சி செய்து வருகின்றன என்ற கூறியிருந்தார்-

இதற்குப் பதிலளித்தே அந்தக் கடிதம திரு ரஞ்சன் விஜேரத்னாவிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது-

கடிதத்தில் மேலும கூறப்பட்டுள்ளதாவது-

ஒரு பொறுப்பவாய்ந்த அமைச்சரினால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை மிகவும முக்கியம வாய்ந்தது என்றே கருதுகிறோம-

இத்தகைய தொழிற்சங்க இயக்கங்களின் மீது பழி சுமத்த அமைச்சரை நிர்ப்பந்தித்த காரணிகளை விளக்குவாராயின் அது ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைய நடந்து கொள்ளும தொழிற்சங்க இயக்கத்திற்கு உபோதுகலியாக இருக்கும-

அரசின் மக்கள் விரோத. ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாங்கள் பலமுறை கண்டித்து வந்திருக்கிறோம-

ஒருங்கிணைக்கு தொழிற்சங்கக் கமிட்டியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசு சுமத்தும சதிக் குற்றச்சாட்டுத்தான் பதில் எனின். அதனை விவேகமுள்ள செயலாக நாகரிக சமுதாயம ஏற்றுக் கொள்ளாது-

தொழிற்சங்க இயக்கத்தின் மூலமான சதி முயற்சி இருக்கின்றது எனில் அனைத்துக் கட்சிகளையும பிரதிநிதித்துவப்படுத்தும வகையில் குழுவொன்றை அமைத்து அதனை விசாரணை செய்வது ஜனநாயகக் கோட்பாடாகும-

ஜனநாயக பாபு வழித் தொழிற்சங்க முயற்சிகளை முடக்குவதில் அரசும அதன் ஜாதிக சேவக சங்கமயவைச் சார்ந்தவர்களுந்தான் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற உண்மையை எமக்குச் சொல்ல வேண்டும

இந்த செயல்களினால்தான் ... டன் பெரமுன போன்ற இயக்கங்கள் உருவாவதற்கும வழிவகுத்தன-

எனவே எதிர்காலத்தில் அத்தகைய நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கும ஜனநாயகத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும உதவும வகையில் விவேகத்துடனும ஜனநாயக அடிப்படையிலும செயற்படுவீர்களாயின் எவருக்கும் சதி செய்யும வாய்ப்பு ஏற்படாது-

இவ்வாறு அக் கடிதத்தில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளது

(ஐ-கு)

# 1991 ஆம் ஆண்டை எயிப்ஸ் ஒழிப்பு ஆண்டாக

## பிரகடனப்படுத்த வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 4

1991 ஆம் ஆண்டை "சர்வதேச எயிட்ஸ் ஒழிப்பு ஆண்டாகப் பிரகடனம செய்ய வேண்டும-

இலங்கையைச் சேர்ந்த இளம விஞ்ஞானியும டாக்டருமான தயாளு நரேந்திர ராஜபக்ஷ உலக சுகாதார நிறுவனத்திடமும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்திடமும இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்-

அவர் இது தொடர்பாகத் தொடர்ந்து தெரிவித்திருப்பதாவது-

எயிட்ஸ் நோய் தொற்று நோயாக மாறலாம்- இந்த எயிட்ஸ் நோயாளர்களை இனம காணல், சிகிச்சை அளித்தல், இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளல், எயிட்ஸ் நோயின் பயங்கரம் பற்றி விரிவாக பிரசாரம செய்தல் போன்றவை மிக அவசியமாகும-

எயிட்ஸ் நோய் ஒழிப்புக்காக தகுந்த சிகிச்சை முறையைக் கண்டுபிடிப்பதற்கும 1991 ஆம ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளலாம்-

இந்த சர்வதேச எயிட்ஸ் நோய் ஒழிப்பு ஆண்டு பிரகடனம முழு மனித சமுதாயத்திற்கும செய்யும பெரும சேவையாக அமையும-

இவ்வாறு டாக்டர் ராஜபக்ஷ குறிப்பிட்டு உள்ளார்-

(இ-007)

## பிணமாக மீட்பு

கொழும்பு மார்ச் 4

தொழிலுக்குச் சென்ற தமிழ் இளைஞன் ஒருவன் சில தினங்களின் பின்னர் பிணமாக மீட்கப்பட்டார்-

நீர்கொழும்பு, குடாப்பாடு பகுதியைச் சேர்ந்த ஏ சிறிதரன் அல்லது குமார் (வயது 23) என்பவரே இவ்வாறு பிணமாக மீட்கப்பட்டவராவார்-

தொழிலுக்குச் சென்ற பிரஸ்தாப இளைஞர் வழமைபோல் வீடு திரும்பவில்லை- இதனால் இவரது பெற்றோர் நீர்கொழும்பு பொலிஸில் முறைப்பாடு செய்தனர்-

இந்த முறைப்பாட்டை அடுத்தே பொலிஸார் கடோல் கெலே காட்டுப் பகுதியிலிருந்த இவரது சடலத்தை மீட்டுள்ளனர்

இந்த மர்மக் சாவை சமபவம் குறித்து நீர்கொழும்பு பொலிஸார் மேல் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்-

(எ-வ)

மேல் மாகாண உணவு கூட்டுறவு கைத்தொழில் மீன்பிடித் துறை சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம யூசுப் பேசுகையில்-

முஸ்லிமகள் எப்பொழுதும ஏனைய சமுதாயங்களுடன் இணைந்து ஐக்கியமாக வாழ வேண்டும- இன்றைய அரசும அனைத்து மதங்களுக்கும உரிய மதிப்பையும மரியாதையையும அளித்து வருகிறது என்றார்-

[ஐ—040]

## அரசின் தாராள

# பொருளாதார கொள்கையினால் பலருக்கு வேலை வாய்ப்பு

## ராஜாங்க நிதியமைச்சர்

நாத்தாண்டி மார்ச் 3

அரசின் தாராளப் பொருளாதாரக் கொள்கையைப் பலரும விமர்சிக்கின்றனர்- எனினும இதன் மூலம பல்லாயிரக் கணக்கானோர் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளதை மறைப்பதற்கில்லை-

புத்தளம மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும ராஜாங்க நிதியமைச்சருமான திரு ஹெரல்ட் ஹேரத் இவ்வாறு உரையாற்றினார்-

நாத்தாண்டி நகருக்கண்மையிலுள்ள குடாமடுவெல்லை என்னுமிடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலே அமைச்சர் உரையாற்றினார்-

மீனவர்கள் செறிந்து வாழும இக்கிராமத்தில் இப்பொதுக் கூட்டம நடைபெற்றது-

மீன் பிடிப்பதற்கான வள்ளங்களையும வலைகளையும அமைச்சர் இவ்வைபவத்தில் வழங்கினார்- மோட்டார் சைக்கிள் - பணம - மீன்பிடி இயந்திரங்கள் முதலானவையும அமைச்சரினால் வழங்கப்பட்டன- இவற்றின் பெறுமதி சுமார் 10 லட்சம ரூபாவாகும-

ராஜாங்க அமைச்சர் திரு ஹெரல்ட் ஹேரத் தொடர்ந்து கூறியதாவது-

மக்கள் சுயமாகத் தொழில் செய்து வாழ்க்கை நடத்துவதற்கு உதவி புரிவது அரசின் குறிக்கோளாகும-

மீனவர்கள் இந்நாட்டின் முக்கியமானவர்களாவர்- கடலால் சூழப்பட்ட இலங்கையில் மீன்பிடித் தொழில் மேலும அபிவிருத்தியடைய வேண்டும-

மீனவர்களின் தொழில் ஆபத்தானது- எனவேதான் அவர்களின் நலனுக்காக அரசு பல நல்ல திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது-

இவ்வாறு அமைச்சர் உரையாற்றினார்-

(ஐ—225)

# உதைபந்தாட்டத்துக்கு பாடசாலைகளில் முதலிடம்

## விரைவில் திட்டம் அறிமுகமாகும்

கொழுமபு, மார்ச் 4

உதைபந்தாட்டத்தை முக்கிய பாடசாலை விளையாட்டுகளில் ஒன்றாக அறிமுகப்படுத்தும திட்டமொன்றை விரைவில் உதைபந்தாட்டச் சமமேளனம நடைமுறைப்படுத்தும.

இத்தகவலை இலஙகை உதைபந்தாட்டச் சமமேளனத் தலைவர் வீரசிங்க மல்லிமாராச்சி வெளியிட்டார்,

மேற்படி சமமேளனம கொழும்பு கலதாரி ஹோட்டலில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியது, அம்மாநாட்டில் திரு வீரசிங்க மல்லிமாராச்சி கலந்து கொண்டு உரையாற்றினார்,

இவ்வாண்டு நடைபெறவுள்ள உதைபந்தாட்ட லீக் ஆட்டஙகளுக்கும உதைபந்தாட்ட கிண்ணப் போட்டிக்கும பொருளாதார ரீதியாக உதவ இலஙகை டுபாக்கோ நிறுவனம முன்வந்துள்ளது; சிரமஙகளுக்கு மத்தியிலும இவ்விரு போட்டிகளுக்கும உதவ முன்வந்திருப்பதைக் குறிப்பிட்ட திரு மல்லிமாராச்சி, அந் நிறுவனத்தைப் பாராட்டினார்,

உதைபந்தாட்டக் கிண்ண இறுதியாட்டம எதிர்வரும ஏப்ரல் 28 ஆம திகதி சுகததாச அரஙகில் நடைபெறும, அன்றைய ஆட்டத்தில் ஜனாதிபதி பார்வையாளராகக் கலந்து கொள்வார்,

இக்கிண்ணத்தை வெற்றி கொள்ளும அணிக்கு முதல் பரிசாக பதினைந்தாயிரம ரூபாவும, இரண்டாம பரிசாக பத்தாயிரம் ரூபாவும வழங்கப்படும,

(எ-032)

## அமெரிக்க அணிக்கு எதிராக லெண்டல் விளையாடுவார்

### செய்திக்கு பலத்த மறுப்பு

பிறேக், மார்ச் 3

இவ்வாண்டு டேவிஸ் கிண்ண சுற்றாட்டஙகளில் செக்கோசிலவாக்கியா சார்பாக ஆட்டஙகளில் கலந்துகொண்டு அமெரிக்க அணியை லெண்டல் எதிர்ப்பார், என்று வெளிவந்த செய்திகளை லெண்டல் முற்றாக மறுத்துள்ளார்,

இவான் லெண்டல் டெனிஸ் துறையில் உலகின் முன்னணி ஸ்தானத்தை வகித்து வருகிறார்.

1984ஆம ஆண்டு முதல் அமெரிக்காவின் குனெக்டிகட் மாநிலத்தில் வசித்து வரும இவர் 1992 ஆம் ஆண்டே அமெரிக்கக் குடியுரிமை பெறுகிறார்,

தான் செக்கோசிலவாக்கிய பிரஜையாக இருந்தாலும தனக்கு குடியுரிமை வழஙகவிருக்கும நாட்டுக்கு எதிராக ஒரு போதும ஆடப்போவதில்லை என்று லெண்டல் தன் நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தனது நாட்டுக்காரரான மிலாஸ்லாவ் மெசியருடன் கண்காட்சி டெனிஸ் ஆட்டஙகளில் ஈடுபடும பொருட்டு செக்கோசிலவாக்கியாவுக்கு வருகை தந்துள்ள இவர் இப்போது தான் ஆறு ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக தாய்நாடு திருமபியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது,

செக்கோசிலவாக்கியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றஙகளை வரவேற்றுள்ள லெண்டல், நாற்பதாண்டு கால சீரழிவை ஒரே சமயத்தில் சீர்திருத்தி விட முடியாது என்று குறிப்பிட்டார்,

இவான் லெண்டல் 1992ஆம் ஆண்டு பார்சலோனா ஒலிமபிக் போட்டியில் அமெரிக்கா சார்பாக டெனிஸ் ஆடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது,

(எ-032)

## விளையாட்டு பகுதி

## கட்டுப்பாட்டுடன் நடக்க விளையாட்டு உதவும்

### ஊவாமாகாண ஆளுநர்

பதுளை, மார்ச் 3

"ஒவ்வொருவரும தமமைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் விளையாட்டுத் துறையில் ஈடுபட முன்வர வேண்டும"

இவ்வாறு ஊவா மாகாண ஆளுநர் திரு திலக் ரட்நாயக்கா கூறினார்-

பதுளை "சைமன் பீரிஸ்" ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விருது வழஙகும வைபவத்தில் உரையாற்றும போது திரு ரட்நாயக்கா மேற்கண்டவாறு கூறினார்-

ஊவா மாகாணத்தைச் சேர்ந்த மெய்வல்லுநர் பலருக்கு விருதுகள் வழஙகும வைபவத்தை விளையாட்டு அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது-

ஆசிய விளையாட்டு வைபவஙகளில் தஙகப் பதக்கஙகளை பெற்ற விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும வகையில் இவ் வைபவம ஒழுஙகு செய்யப்பட்டிருந்தது-

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் திரு திலக் ரட்னாயக்க கூறியதாவது:-

விளையாட்டு தேகாரோக்கியத்திற்கு மாத்திரமின்றிஅன்றாட வாழ்க்கைக்கும மிக அவசியமானது- பதுளை மாவட்ட விளையாட்டுத் தரத்தை உயர்த்துவதற்கு என்னால் முடிந்தளவு உதவி செய்வேன்-

எனது சம்பளத்தின் 500 ரூபாவை மாதாந்தம ஊவா மாகாண விளையாட்டு நிதிக்கு ஒதுக்கவும் ஏற்பாடு செய்துள்ளேன்-

காரணம்- எனவே எமது பிரதேசத்தின் விளையாட்டுத் தரத்தை உயர்த்த நாம் எல்லோரும ஒன்றுபட வேண்டும என்றார்-

ஊவா மாகாண சபை இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் திரு முனிரட்ன அத்தநாயக்க, காணி, போக்குவரத்து அமைச்சர் திரு ஆர் எம ரட்நாயக்க மற்றும் பலர் உரையாற்றினர்-

ஊவா மாகாண சபை ஆளுநர் திரு திலக் ரட்னாயக்க, முதலமைச்சர் திரு பேர்ஸி சமரவீர மற்றும அமைச்சர்கள் விளையாட்டு வீரர்களுக்கு விருதுகள் வழஙகி கௌரவித்தனர்-

(எ-037)



பதுளையிலிருந்து 1932 ஆம ஆண்டு, முதன் முறையாக வெளிநாடு சென்று உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட ஜனாப் எம சமூனுக்கு ஊவா மாகாண முதலமைச்சர் திரு பேர்ஸி சமரவீர பரிசு வழஙகுவதைப் படத்தில் காண்க.

[படம- பதுளை நிருபர் வி தியாகராஜா]

(எ-037)

## குருநாகலில் கிரிக்கெட் போட்டி

குருநாகல், மார்ச் 3

குருநாகல் மல்லிய தேவ ஆண்கள் கல்லூரி 19 வயதின் கீழ் "ஏ" அணிக்கும, "பி" அணிக்கும இடையில் ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட 25 ஓவர் கிரிக்கெட் போட்டியொன்று அண்மையில் கல்லூரி விளையாட்டரஙகில் நடைபெற்றது.

முதல் துடுப்பெடுத்தாடிய "பி" அணி 18 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும இழந்து 142 ஓட்டஙகளை எடுத்தது,

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய "ஏ" அணி 20 ஓவர்களில் எட்டு விக்கெட் நஷ்டத்துக்கு 143 ஓட்டஙகளை எடுத்து இரண்டு விக்கெட்டால் வெற்றி பெற்றது,

(எ-138)

## வானொலி

**5—3—1990**

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — சிவபுராணம — சேலம ஜெயலக்ஷ்மி
5-30 பாமாலை — திருவாசகம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை
5-55 போதிமாதவனின் போதனைகள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 பேச்சு — என்புருக்கும வாசகத்தில் எமையுருக்கும வாசகஙகள் — டாக்டர் ஏ சண்முகதாஸ்
9-45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு — மெண்டலின் — ஸ்ரீநிவாஸ்
10-45 குரல்வகை
11-00 ஒலிபரப்பு முடிவு

**6—3—1990**

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — ஸ்ரீ காமாட்சியமமன்

முஸ்லிம் தைக்காவில் நடைபெற்ற 94ஆவது வருடாந்த மனாகிப் நிகழ்ச்சிகளின் தொகுப்புரை
8-20 இஸ்லாமிய கீதம
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 நாடகம — "மாயைகள்" எழுதியவர்: எஸ் எச் நிஃமத்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 உரைச் சித்திரம — மலர்கள் — எழுதியவர்: எஸ் நடராஜா

## விமான சேவைகள்

மார்ச் 5- (திஙகட்கிழமை)

மார்ச் 6 (செவ்வாய்க்கிழமை)

## மார்ச் 5- (திங்கட்கிழமை)

### வந்து சேரும் நேரம

| | | | |
|---|---|---|---|
| 0550 லண்டன், பஹ்ரேன் | ஏ | ஈ | 138 |
| 0540 கராச்சி, பமபாய் | யூ | எல் | 182 |
| 0700 துபாய் | ஈ | கே | 802 |
| 0700 குவைத் | யூ | எல் | 228 |
| 0715 சிப்போல், பிரான்ஸ், அபுதாபி | யூ | எல் | 564 |
| 0740 பிராஸ்பாப், சூரிச் துபாய் | யூ | எல் | 548 |
| 1035 பிராஙபோட் | டி | எப் | 3540 |
| 1140 சென்னை | ஐ | சி | 573 |
| 1145 மாலைதீவு | ஈ | கே | 803 |
| 1205 மாலைதீவு | யூ | எல் | 102 |
| 1500 திருவனந்தபுரம | ஐ | சி | 507 |
| 1515 மாஸ்கோ, கராச்சி | எஸ் | யூ | 543 |
| 1545 திருவனந்தபுரம | யூ | எல் | 162 |
| 1800 திருச்சி | ஐ | சி | 577 |
| 2000 சிஙகப்பூர் | யூ | எல் | 303 |
| 2015 மாலைதீவு | யூ | எல் | 122 |
| 2040 நெரீடா, பிராஙபோட் | யூ | எல் | 457 |
| 2125 பாஙகொக் | யூ | எல் | 503 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0650 மாலைதீவு, பஹ்ரேன், லண்டன் | ஏ | ஈ | 138 |
| 0800 மாலைதீவு | ஈ | கே | 802 |
| 0830 மாலைதீவு | யூ | எல் | 101 |
| 0930 சிஙகப்பூர் | யூ | எல் | 302 |
| 1000 பாஙகொக் | யூ | எல் | 402 |
| 1225 பிராஙபோட் | டி | எப் | 3540 |
| 1235 திருவனந்தபுரம | ஐ | சி | 573 |
| 1245 துபாய் | ஈ | கே | 803 |
| 1300 திருவனந்தபுரம | யூ | எல் | 161 |
| 1540 திருச்சி | ஐ | சி | 507 |
| 1715 கராச்சி, மாஸ்கோ | யூ | எல் | 162 |
| 1645 சென்னை | யூ | எல் | 121 |
| 1840 சென்னை | ஐ | சி | 577 |
| 2115 மஸ்கட் | யூ | எல் | 209 |
| 2330 துபாய், லண்டன் | யூ | எல் | 503 |

## மார்ச் 6 (செவ்வாய்க்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0650 மஸ்கட் | யூ | எல் | 210 |
| 0700 அபுதாபி | ஜீ | எப் | 4144 |
| 0800 துபாய் | ஈ | கே | 800 |
| 0950 திருச்சி | யூ | எல் | 132 |
| 1140 மாலைதீவு | ஐ | சி | 586 |
| 1315 சொப்பியா | ஐ | இஸட் | 595 |
| 1330 திருவனந்தபுரம | யூ | எல் | 162 |
| 1600 மாலைதீவு | யூ | எல் | 102 |
| 1755 பமபாய் | ஐ | சி | 586 |
| 2050 கராச்சி | பீ | கே | 774 |
| 2215 குவைத் | யூ | எல் | 228 |
| 2235 சிஙகப்பூர் | எஸ் | கியூ | 402 |
| 2245 மாலைதீவு | யூ | எல் | 122 |
| 2330 பாஙகொக் | ஐ | இஸட் | 556 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0700 திருச்சி | யூ | எல் | 131 |
| 0815 அபுதாபி | ஜீ | எப் | 4145 |
| 0915 துபாய் | ஈ | கே | 800 |
| 1015 குவைத் | யூ | எல் | 227 |
| 1045 திருவனந்துபுரம | யூ | எல் | 161 |
| 1200 மாலைதீவு | யூ | எல் | 101 |
| 1235 பமபாய் | ஐ | சி | 586 |
| 1415 பாஙகொக் | ஐ | இஸட் | 595 |
| 1730 ரியாத் | யூ | எல் | 271 |
| 1840 சென்னை | ஐ | சி | 586 |
| 1915 சென்னை | யூ | எல் | 121 |
| 2150 மாலைதீவு, கராச்சி | எஸ் | கியூ | 402 |
| 2350 சிஙகப்பூர் | பீ | கே | 774 |

குறிப்பு— யூ எல் — எயர் லஙகா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

மாகாண விளையாட்டு நிதிக்கு ஒதுக்கவும் ஏற்பாடு செய்துள்ளேன்-

இவ்வாறு அவர் கூறினார் ஊவா மாகாண சபை முதலமைச்சர் திரு பேர்ஸி சமரவீர பேசும்போது கூறியதாவது:-

மத்திய அரசாஙகம் விளையாட்டுத் தரத்தை உயர்த்துவதற்கு மாகாண சபைகளுக்கு நிதி வழஙகாதது வேதனைக்குரிய விடயமாகும்- இதற்காக நான் அரசாஙகத்தை குறை கூறவில்லை

நாட்டில் ஏற்பட்டுவரும பணத் தட்டுப்பாடே இதற்குக்

## பிரிஸ்டல் கிண்ண உதைபந்தாட்ட போட்டி

புத்தளம, மார்ச் 3

"பிரிஸ்டல் வெற்றிக் கிண்ணத்திற்காக" (முதலாம டிவிஷன்) நடைபெறும உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரபல கழகஙகளான "ஓல்ட் பென்ஸ்" கழகமும், "சன்னி மவுண்ட்" கழகமும மோதிக் கொண்டன-

ஆட்டம் ஆரமபம முதல் இறுதி வரை மிகவும விறுவிறுப்பாக நடைபெற்றது-

ஆயினும பலமிக்க "ஓல்ட் பென்ஸ்" கழகம 2—0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது-

கொழும்பு சுகததாச விளையாட்டரஙகில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு ஆர் எம மஹ்தூன் நடுவராகக் கடமைபுரிந்தார்-

திறமை மிக்க "சோண்டர்ஸ்" கழகம் 1—0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

கொழுமபு சுகததாஸ விளையாட்டரஙகில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு ஏ எம் யாப்பா நடுவராகக் கடமையாற்றினார்

(எ-241)

5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வாத்திய விருந்து
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 நெஞ்சோடு நெஞ்சம — மாதர் மஜ்லிஸ்
பிரதி: எம ஏ ரஹீமா
9-00 வர்த்தக சேவை

பகல் —
10-00 இசையமுதம
10-30 பாட்டு - என் ராஜு
11-00 இசைக்கச்சேரி — எம பாலமுரளி கிருஷ்ணா
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-30 இசைப் பேருரை — பி சந்திரசேகரம
7-00 நாட்டுக்கூத்து
7-30 அஙகும இஙகும — செய்திச்சுருள்
7-50 உலகச் செய்திகள்

இரவு —
8-00 தர்ஜமதுல் குர்ஆன்
8-05 முஸ்லிம உலகம — வாரமஞ்சரி
தொகுப்பு: அல்ஹாஜ் என் எம அமீன்
8-15 இஸ்லாமிய வரையறை — தொடர் பேச்சு
பேசுபவர்: மௌலவி எம எம ஏ முபாரக்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 இஸ்லாமிய கீதம
பாடுபவர்: ஏ எம ஏ ஜப்பார்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும

5-00 நாதஸ்வரம்
5-05 தோத்திரமாலை — ஸ்ரீ காமாட்சியமமன் சுப்ரபாதம
5-30 பாமாலை - சுப்ரமணிய திருவிருத்தம
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை வழஙகுபவர்: மௌலவி எம எல் எம முபாரக் அவர்கள்
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 நாதவினோதம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 நெஞ்சோடு நெஞ்சம — மாதர் மஜ்லிஸ்
பிரதி: பிர்தௌஸியா ஆப்தீன்
9-00 வர்த்தக சேவை

பகல் —
10-00 இசையமுதம
10-30 பாட்டு - டாக்டர் இராமநாதன்
11-00 வீணைக் கச்சேரி — ஜி காயத்ரி
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 சைவநெறி
6-30 மெல்லிசைப் பாடல்கள்
6-45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி - வசந்திபோல்
7-00 இளைஞர் மன்றம - நடத்துபவர்: ந தேவதாஸ்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு —
8-00 தர்ஜமதுல் குர்ஆன்
8-05 கொழுமபு பழைய சோனகத்தெரு மஸ்ஜிதுல் ...

மலர்கள் - எழுதியவர்: எஸ் நடராஜா
10-00 தாள வாத்தியக் கச்சேரி - மிருதஙகம — கே கே அச்சுதன்
10-30 மெல்லிசைப் பாடல்கள்
10-45 பஜன் - லதா மஙகேஷ்கர்
11-00 ஒலிபரப்பு முடிவு.

## டெலிவிஷன்

5—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி — சிஙகளம
5-00 செய்திகள் - சிஙகளம
5-30 மின்னும தாரகை
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 தமிழ் பாடல்கள்
6-30 செய்திகள் — தமிழ்
6-55 தமிழ் நாடகம
7-25 வசந்த சமய
8-00 செய்திகள் — சிஙகளம
8-30 போடிம — நாடகம
9-00 கீதமஞ்சரி
9-30 செய்திகள் — ஆஙகிலம
10-00 டேட்லைன்
10-15 ஹன்வன் — மினி தொடர்

### ஐ. டி. என்.

6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 கப்டன் குக்ஸ் டிரவல்ஸ்
6-30 செய்திகள் — சிஙகளம
7-00 என்ரீ லிப்ரி
7-30 மதுரசாஙக
8-00 ரபர்ட்டி
9-00 பொன்சொயிர்
9-30 பிரெஞ்சுத் திரைப்படம
10-00 செய்திகள் — ஆஙகிலம
10-26 பிரெஞ்சுத் திரைப்படம — தொடர்ச்சி

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்


## வரதரின் ஈழ பிரகடனம் ஒரு கேலிக்கூத்து — ரஞ்சன்

திரு வரதராஜப் பெருமாளின் ஈழப் பிரகடனம் ஒரு கேலிக்கூத்தாகும்.

இதற்காக சிரிப்பதைத் தவிர எதனையும் கூற இயலாது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார்.

திரு வரதராஜப் பெருமாளின் ஈழப் பிரகடனம் தொடர்பாக அமைச்சரிடம் "தினபதி" நிருபர் கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு வரதராஜப் பெருமாள் தமது இறுதி துருமபை பாவித்துள்ளதாகவும் திரு விஜேரத்ன மேலும் கூறினார். [ல—007]

# வைக்கோலை பசளையாக உபயோகிக்க ஆலோசனை

புத்தளம், மார்ச் 3

பசளை விலை பன்மடங்காக அதிகரித்திருக்கும் இவ்வேளையில் விவசாயிகள் வைக்கோலை மாற்று பசளையாக உபயோகித்து அதிக பயனை பெறலாம்.

புத்தளம் பகுதி விவசாய ஆலோசகர் திரு டீ.எம. சார்ள்ஸ் சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

விவசாயம் சம்பந்தமான கருத்தரங்கொன்று அண்மையில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த வட்டுக்காவளி என்னுமிடத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது திரு சில்வா தொடர்ந்து கூறியதாவது.

உவர் நிலங்களில் விதைப்பதற்கென விசேஷமாக உண்டாக்கப்பட்ட "ஏ டி—69—2" வர்க்க நெல் இனம் புத்தளம் பகுதியில் சிறந்த பயனை தருகின்றது.

இதனை இப்பகுதியில் பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்ததில் பெரும பயன் ஏற்பட்டுள்ளது.

எனவே இனி புத்தளப் பகுதி விவசாயிகள் இந்த வர்க்க நெல்லை விதைப்பதன் மூலம் அதிக பயனை பெறலாம்.

மேலும் அறுவடைக்குப் பின் கிடைக்கும் ஏராளமான வைக்கோலை வீணே மாட்டுக்கு மாத்திரம தீனியாக உபயோகிக்காமல் அதனை வயல்களில் தூவி அதன் மேல் யூரியாவை சிறிதளவு தூவுவதன் மூலம் மாற்றுப் பசளையாக பயன்படுத்தலாம்.

இதன் மூலம இரசாயனப் பசளைக்காக செலவு செய்யப்படும அதிகளவு பணம மீதமாகும். இயற்கை பசளையின் உபயோகத்தை கைக்கொள்ளும முறையையும அதிகரிக்க செய்யலாம" என்றார். (இ—241)

## காங்கேசன்துறையிலிருந்து 195 ஜவான்கள் வெளியேறுவர்

கொழும்பு, மார்ச் 4

காகேசன்துறையில் இருந்து 195 ஜவான்கள் வெளியேற விருக்கிறார்கள்.

அரசு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ள சமபவங்கள் பின்வருமாறு.

கண்டியில் பாதுகாப்புப் படையினர் வீடொன்றில் தேடுதலை நடத்தினார்கள். அப்பொழுது தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டார்.

கேகாலையில் 6 தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்தார்கள்.

அனுராதபுரம், கின்தோட்டம, பதவிய பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் 2 தீவிரவாதிகளை கைது செய்தார்கள். அப்பொழுது துப்பாக்கிகளையும, பொலீஸ் சீருடைகளையும சப்பாத்துகளையும அவர்கள் கைப்பற்றினார்கள்.

பதுளையில், ரிவோல்வருடன் இருந்த மாணவர் ஒருவர் பொலீஸ் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார். (ல—455)

## ஈழ பிரகடனம் இந்தியா ஆதரிக்காது

### தூதரகம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 4

ஈழப் பிரகடனத்தை இந்தியா எந்த வடிவிலும ஆதரிக்காது.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம கடந்த வெள்ளிக்கிழமை விடுத்த பத்திரிகை அறிக்கையில் இப்படித் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில், மாகாண சபை கொண்டு வந்திருக்கும தீர்மானம பற்றி இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

இலங்கையின் ஐக்கியம, ஒருமைப்பாட்டை இந்தியா எப்பொழுதும ஆதரிக்கிறது.

இந்த தெட்டத் தெளிவான கொள்கையைக் கொண்டு எந்த வடிவத்தில் எவ்விதமான ஈழக்கோரிக்கைக்கும அது ஆதரவு அளிக்காது".

இப்படி அந்த அறிக்கை கூறுகிறது. (ல—ந—455)

## கூட்டுப் படையினரின் பிரிகேட் நிலையம்

### கொழும்பில் இவ்வாரம் முதல் இயங்கும்

கொழும்பு, மார்ச் 4

இலங்கை இராணுவம இவ்வாரம முதல் கொழும்பில் "பிரிகேட் நிலையம" ஒன்றை ஏற்படுத்த உள்ளது.

பாதுகாப்புப் படையினரையும பொலீஸாரையும கொண்ட கூட்டுப் படையாக இது இருக்கும.

கொழும்பிலும அதன் சுற்றுப் புறங்களிலும பாதுகாப்புக்குப் பொறுப்பாக இந்தப் படை இருக்கும.

இந்தப் புதிய நிலையம கேணல் சதீஸ் ஜெயசுந்தர தலைமையின் கீழ் இயங்கும. இந்தப் புதிய படைத் தளபதி ஏற்கனவே கூட்டு நடவடிக்கைகளுக்கான உத்தரவிடும அதிகாரியாக பணி புரிந்துள்ளார்.

கூட்டுப் படையினரின் அணி வகுப்பு எதிர்வரும 8 ஆம திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும என்றும அணி வகுப்பு மரியாதையை வெளிவிவகார அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன ஏற்றுக் கொள்வார் என்றும கூட்டுப் படைகளின் தலைமைக் காரியாலயம கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தது. (ல—சூ)

## லொட்டோ

கொழும்பு, மார்ச் 4

கடந்த வெள்ளிக்கிழமை இழுக்கப்பட்ட லொட்டோ 63ஆம இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு.

வெற்றி பெறும எண்கள்:

**13 28 11 15 27 19**

1ஆம் பங்குப் பரிசு ரூபா 12 லட்சம (6 எண்களும் சரியெனில்)

2ஆம் பங்குப் பரிசு ரூபா 43051 சதம 06 (5 எண்களும சரியெனில்)

3ஆம பங்குப் பரிசு

## திடீர் விஜயம்

சுற்றுலா அமைச்சர் திரு ஏ எம எஸ் அதிகாரி, மரு

## ஒருதலைப்பட்ச ஈழ பிரகடனத்தை டெலோ நிராகரித்தது

கொழும்பு, மார்ச் 4

தமிழ் பேசும மக்கள் அமைதியை நாடி நிற்கும இவ்வேளையில் ஒருதலைப்பட்சமான ஈழ ஜனநாயக குடியரசு பிரகடனத்தை நாம திட்டவட்டமாக நிராகரிக்கிறோம்.

தமிழீழ விடுதலை இயக்கம (டெலோ) கடந்த வெள்ளிக்கிழமை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படி தெரிவித்துள்ளது.

டெலோ தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

ஒரு தலைப்பட்சமான சுதந்திர பிரகடனம் என்பது ஒரு சாதாரண அரசியல் விடயமல்ல.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மக்களின் பூரணமான ஆதரவுடனும மக்களை பாதுகாக்கக்கூடிய வலிமையுடனும மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும.

ஆனால் இந்த நிலைமைகள் எதுவுமே இல்லாமல் பெருமாள் அரசு செய்துள்ள சுதந்திரப் பிரகடனமானது ஒரு வகையில் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவ்வரசு கையாண்டுள்ள ஒரு அரசியல் யுக்தியே ஆகும.

அரசியல் சாசன விளைவுகளையும சர்வதேச ரீதியிலான தாக்கங்களை [illegible] பற்றி எந்தவித அக்கறையுமின்றி இத்தகைய சாசன நடவடிக்கையில் பெருமாள் அரசு ஈடுபட்டிருப்பது அந்த அரசியல் தலைமையின் [illegible] போக்கினையும [illegible] மையையுமே காட்டுகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ல—கு)

## இந்துசமய போட்டி 10ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 4

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம அகில இலங்கை ரீதியாக நடத்தும இந்துசமயப் போட்டி மாவட்ட மட்டத்தில் எதிர் வரும 10ஆம 11ஆம திகதிகளில் கொழும்பு — கம்பஹா — மட்டக்களப்பு — திருகோணமலை — அம்பாறை — இரத்தினபுரி — பொலன்னறுவை — கண்டி — பதுளை — நுவரெலியா — மாத்தளை — யாழ்ப்பாணம — கிளிநொச்சி — வவுனியா — முல்லைத்தீவு — புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் தோற்றும பரீட்சார்த்திகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. போட்டி நடுவர்களுக்கான தெரிவுக் கடிதங்களும அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

போட்டிக்கு அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காதவர்கள் உடனடியாக இந்துசமய கலாசார திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

மாவட்ட மட்டத்தில் நடைபெறும போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் கொழும்பில் நடத்தப்படும் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர். இதில் வெற்றி பெறுபவர்களுக்கு மாவட்ட மட்டத்திலும அகில இலங்கை ரீதியாகவும பரிசில்களையும சான்றிதழ்களையும இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் பி பி தேவராஜ் வழங்கி கௌரவிப்பார். (இ)


கேள்விப்பத்திர அறிவித்தல்



دار العلوم الفرقانية

தாருல் உலூம்

## அறிவித்தல்

## தொலைத்தொடர்புத் திணைக்களம்

### வடக்குக் கிழக்குப் புனருத்தாரண வேலைத்திட்டம்

### துணுக்காய் கட்டிட புனருத்தாரண வேலைகள்

அரசாங்கத் திணைக்களங்கள்/நிர்மாணக் கூட்டுத்தாபனங்கள்/மாகாண அபிவிருத்திச் சபைகள் என்பனவற்றோடு பதிவுசெய்து கொண்டுள்ள கட்டிட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒரு மில்லியன் ரூபா பெறுமதிக்கு மேற்கூறப்பட்ட கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன-

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, தொலைத் தொடர்புத் தலைமையகம், 06 ம் மாடி, தொலைத் தொடர்புப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட இதற்கான படிவத்தில் இணைப்படிவத்துடன் Duplicate / சமர்ப்பிக்கப்படல் வேண்டும்-

முறைப்படி நிரப்பப்பட்ட கேள்வி ஆவணங்கள் தொலைத்தொடர்புத் திணைக்கள கேள்விப்பத்திர சபைத் தலைவரினால் 1990 மார்ச் 30 ஆம் திகதி மு ப 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்-

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் மேற்கூறப்பட்ட பதிவு செய்த கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்குக் கடந்த இரண்டு வருட காலங்களில் 500.000/- ரூபாவுக்கு மேற்பட்ட இது போன்ற ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவற்றை திருப்திகரமாக முடித்தமைக்கான ஆவண அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்-

கொழும்பு-1, லோட்டஸ் வீதி, தொலைத் தொடர்பு திணைக்கள பிரதான சிறுப்பரிடம் செலுத்திய திருப்பித் கொடுபடாத காசு வைப்புப் பணம் ரூபா 250/- செலுத்திப் பெற்றுக் கொண்ட பொதுப் பற்றுச் சீட்டை சமர்ப்பிக்கும் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கு, தொலைத் தொடர்புப் பணிப்பாளர் அலுவலகத்தில் 1990 மார்ச் மாதம் திகதி 27 நண்பகல் 12 மணிவரை இப்பத்திரங்கள் வழங்கப்படும்-

ஒப்பம்

பீ கே விக்கிரமாராச்சி

தொலைத் தொடர்புப் பணிப்பாளர்

---

சுற்றுலா அமைச்சர் திரு ஏ எம் எஸ் அதிகாரி, மருதானை புஹாரி ஹோட்டலுக்கும், தெகிவளை மிருகக் காட்சிசாலைக்கும், திடீர் விஜயம் ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டார். (ல-455)

### மாசிமக உற்சவம்

மாசிமகத்தை ஒட்டி கொட்டாஞ்சேனை ஸ்ரீமுத்து மாரியம்மன் கோயிலில் இன்று 5ஆம் திகதி திங்கள் முதல் இலட்சார்ச்சனை நடைபெறவிருக்கிறது- 10 ஆம் திகதியன்று இரதோற்சவம் நடைபெறும், (ல-நூ)

---

சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்றும் அணிவகுப்பு மரியாதையை வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்

ரூபா 43051 சதம் 06
(5 எண்களும் சரியெனில்).
3ஆம் பங்குப் பரிசு
ரூபா 161441 சதம் 47
(4 எண்களும் சரியெனில்)

## மகளிர் தினத்தை முன்னிட்டு விட்டாஸ்பிறே அன்பளிப்பு

கொழும்பு, மார்ச் 2

சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கடந்த புதன்கிழமை காலை சிறுவர், சிறுமியர்களுக்கு "விட்டாஸ்பிறே" புதியரக பால்மா பைக்கட்டுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

சேவா வனித்தா இயக்கத்தால் நடத்தப்படும் கோட்டையிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாச இந்தப் பால்மா பைக்கட்டுக்களை அங்குள்ள குழந்தைகளுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

திருமதி பிரேமதாசவின் உத்தரவின் பேரில் லங்கா மில்க் புட்ஸ் நிறுவனம் இந்தப் பால்மாவை தயாரித்துள்ளது.

இந்த வைபவத்தில் சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத், மகளிர் விவகார ராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி விநீதா ஜயசிங்க உட்பட சேவா வனித்தா இயக்க உறுப்பினர்கள் லங்கா மில்க் புட் நிறுவனத் தலைவர் திரு யாலேகம உட்பட மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(இ-007)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1990 மார்ச் 2 இல்

| | | | | |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 3998-50 | ரூ | 4001-50 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய உடன் மாற்று விகிதம்; 1990 மார்ச் 4 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 3997-60 | ரூ | 4002-35 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 6652-51 | ரூ | 6675-98 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 2316-41 | ரூ | 2338-93 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 683-96 | ரூ | 693-75 |
| 100 ஜப்பான் யென் | ரூ. | 26-5711 | ரூ | 26-8298 |

| | | | | |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. | 123-73 | ரூ | 124-18 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. | 617-84 | ரூ | 620-28 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 233-91 | ரூ | 234-88 |
| 100 ஈரான் ரியால் | ரூ. | 56-96 | ரூ | 57-17 |
| 100 நேபாள ரூபா | ரூ. | 139-57 | ரூ. | 140-15 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ. | 185-89 | ரூ | 186-66 |

## காஷ்மீரில் 21 பேர் கொல்லப்பட்டனர்

ஸ்ரீநகர், மார்ச் 4

இந்தியாவிடம் சுதந்திரம் கோரி காஷ்மீரில் போராட்டம் நடத்திவரும் முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 21 பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்.

(ல)

---

## தாருல் உலூம் Fபுர்கானிய்யா

இல 396/17 பேராதெனிய வீதி-
கண்டி

ஹிஜ்ரி 1410—1411 ம் ஆண்டுகளுக்கான புதிய மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன-

### மாணவர்களை சேர்ப்பதற்கான தகைமைகள்

1 திருக்குர்ஆன் (ஹிப்ழ்) மனன வகுப்பு-

ஏ வயது பத்துக்கு மேற்படாமலிருத்தல்-
பி திருக்குர்ஆன் முழுமையாக பார்த்து ஓதி முடித்திருப்பதுடன் சரளமாகவும் திருத்தமாகவும் ஓதக் கூடியவராக இருத்தல் வேண்டும்-
சி ஐந்தாம் வகுப்புவரை எம்மொழியிலேனும் கற்றிருத்தல் அவசியம்-

2 மௌலவி ஆலிம வகுப்பு-

1 வயது பதினைத்துக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
2 திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடித்திருத்தல் வேண்டும்-
3 ஜீ சீ ஈ ஓ/எல் வரை கற்றுத் தேறியிருக்க வேண்டும்- எட்டாம் வகுப்பு வரை கற்றுத் தேறியிருப்பின் சலுகை வழங்கப்படும்-
* எந்த வகுப்பிலும் சேர விரும்புவோரில் அனாதைகளுக்கு முதலிடம் வழங்கப்படும்-

விண்ணப்பங்கள் அனைத்தும் மார்ச் மாதம் 19 ந் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் பின்னரே மாணவர்கள் தகைமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்-

— அதிபர் —
(மௌலவி பாஸில்)
எம் க்யூ புர்ஹானுத்தீன் அஹ்மத்

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல. 1613. வெளியீட்டு திகதி 5 மார்ச் 1990.

DINAPATHI, 5 Gunasena Mawatha, Colombo 12 —
P.O. Box 1613